Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 189 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 20, திங்கள் 03.06.2013

**உலகம்**



பக். 06

பசுமை காக்கப் போராட்டம்

**இந்தியன்**



பக். 07

போர் கப்பல்களை அகற்றி
மீனவருக்கு பாதுகாப்பு தருக

**விளையாட்டு**



பக். 23

அரச தரப்பு சாட்சியாக
திரிவேதி

# ஒரே இரவில் 4 இந்துக் கோயில்கள் மட்டக்களப்பில் விஷமிகளால் உடைப்பு

## நகை மற்றும் பணம் அபகரிப்பு: புத்தர் சிலை விவகாரம் காரணமா?

மட்டக்களப்பு, ஜூன் 3
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே இரவில் நான்கு இந்து ஆலயங்களை இனந்தெரியாத நபர்கள் உடைத்துச் சேதமாக்கி உள்ளனர். ஆலயங்களில் இருந்த மூல விக்கிரகம், நவக்கிரகங்கள் என்பவற்றை சேதப்படுத்திய இனந்தெரியாதோர் அங்கிருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவங்களால் மட்டக்களப்பு

தொடர்ச்சி: பக்கம் 24



### தமிழ்க் கடவுள்களுக்கும் இங்கு பாதுகாப்பில்லை

மட்டக்களப்பு, ஜூன் 3
"இலங்கையில் தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழ்க் கடவுள்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அதற்கு ஒரு உதாரணமே மட்டக்களப்பில் கோயில்கள் சேதமாக்கப்பட்ட சம்பவம்." இவ்வாறு மட்டக்களப்பில் சேதமாக்கப்பட்ட ஆலயங்களை பார்வையிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்தார். (ங-ரி)

### வட்டுக்கோட்டையில் அபூர்வமான வெள்ளை நாகம்



யாழ்ப்பாணம், ஜூன் 3
வட்டுக்கோட்டை சங்கரத்தை முருகமூர்த்தி கோயிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் அபூர்வமான வெள்ளை நாகம் ஒன்று நேற்று பிடிபட்டது.

குறித்த வீட்டில் வசிக்கும் அந்தணரே அந்த வெள்ளை நாகத்தை வீட்டின் வேப்பமரத்துக்கு கீழிருந்து கண்டுபிடித்துள்ளார்.

தனது வீட்டில் கட்டிவரும் ஆலயத்தின் கடவுளே இவ்வாறு வெள்ளை நாகமாக வந்து அற்புதம் செய்துள்ளதாகவும், எனவே அந்த வெள்ளை நாகத்தை ஆலயச் சூழலிலேயே வசிக்கவிட உள்ளதாகவும் குறித்த அந்தணர் தெரிவித்தார். (ங-4)

# புலிகளின் 120 கோடி சொத்து அரசு வசம்

## விரைவில் ஏலம்: நிதி திறைசேரிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 3
குற்றப்புலனாய்வு பிரிவினரின் நடவடிக்கையால் புலிகளுக்கு சொந்தமான சுமார் 120 கோடி ரூபா கொண்ட சொத்துக்கள் கடந்த வாரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் விரைவில் ஏலத்துக்கு விடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் நிதி திறைசேரிக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் வெளிப்படுத்தி உள்ளார். இதே வேளை, புலிகளுக்குச் சொந்தமான ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான வங்கிக் கணக்குகள், சொத்துக்கள் என்பன தற்போது இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவையும் விரைவில் சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த வாரம் அரசால் சுவீகரிக்கப்பட்ட புலிகளுக்குச் சொந்தமான சொத்துக்களில் காணிகள், அடுக்குமாடி குடியிருப்புகள், அச்சகங்கள், வீடுகள், இயந்திரங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், மீன் பிடி இழுவைப் படகுகள், பல மில்லியன் தொகை கொண்ட வங்கிக் கணக்குகள் என்பன அடங்குகின்றன. இவை அனைத்தும் புலிகளுக்குச் சொந்தமானவை தான் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்பே அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். சுவீகரிக்கப்பட்ட சொத்துகளில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட தொடர்பாடல் கருவி, அரச சார்பற்ற

தொடர்ச்சி: பக்கம் 24

### மர்மக் கப்பல் மூழ்குகிறது சிலாபத்தில்

கொழும்பு, ஜூன் 3
சிலாபத்துக்கு அப்பால் 15 கிலோமீற்றர் வரையிலான தொலைவில் தென்திசைப் பக்கமாக கடலில் கப்பல் ஒன்று மூழ்கிக் கொண்டிருக்கிறது என்று தகவல் கிடைத்துள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலையடுத்து கடற்படையின் டோராப் படகு அந்தப் பிரதேசத்துக்குச் சென்றுள்ளது.

எனினும் ஆபத்தில் சிக்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கப்பலுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இதுவரையில் அந்த டோராப் படகினால் இயலாது போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளபோதும், அந்தக் கப்பல் எந்த நாட்டைச் சேர்ந்தது என்று அறிய முடியவில்லை என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ச-22)

# கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வந்தால்தான் பிரச்சினை தீரும்

## அமைச்சர் டியூ குணசேகர கருத்து

கொழும்பு, ஜூன் 3
அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போர் களத்தை நோக்கியே நகரப்பார்க்கின்றன. கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராவிட்டால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது என்று தெரிவித்துள்ளார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகர.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடந்த காலத்தை போர்க் களத்தை நோக்கியே நகரப்பார்க்கின்றன. இன்னும் பழைய விடயங்களிலேயே தொங்கிக்கொண்டிருக்கின்றன. இதனால் தெரிவுக் குழு விடயத்தில் அரசுக்கும் கூட்டமைப்புக்கும் உள்ள இழுபறிக்கு மூத்த அமைச்சர்களால் தலையிட்டு தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு வராவிட்டால் தமிழர் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது என்று மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும் என்றார். (ங-சி)

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது ஐ.நா. விதிக்கு எதிரானது

கொழும்பு, ஜூன் 3
பிரிட்டனில் புகலிடத் தஞ்சம் கோரிய இலங்கையர்களை நாடு கடத்தும் செயல் ஐ.நா. பிரகடனத்தை மீறிய ஒன்றாகும் - இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளன தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

இது குறித்து அவை தெரிவித்துள்ளதாவது:-

பிரிட்டனில் இருந்து இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ச்சியாக நாடு கடத்தப்பட்டு வருவது ஐ.நா. அமைப்பின் சித்திரவதைகளுக்கான குழு கவனம் செலுத்தி வருகிறது. புகலிடக் கோரிக்கையாளர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்படுகிறார்களா என்பது குறித்து விளக்கும் படியும், இனி மேல் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த வேண்டாம் என்றும் பிரிட்டனிடம் ஐ.நா. கேட்டுள்ளது.

அதையும் மீறி தொடர்ந்தும் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவார்களேயானால் பிரிட்டன் ஐ.நா.வின் பிரகடனத்தை மீறி செயற்படுவதாகவே கருதவேண்டி உள்ளது என்று தெரிவித்துள்ளன. (ங-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் தினத்தையொட்டி கொழும்பில் நடைபவனி

## மும்மொழிகளிலும் விழிப்புணர்வு நிகழ்வுகள்






கொழும்பு, ஜூன் 3

வாக்காளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு மாவட்ட செயலர் கமல் பத்மசிறீயின் விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நடைபவனி ஆரம்பிக்கப்பட்டு இராஜகிரிய ஜனாதிபதி வித்தியாலயத்தில் நிறைவு பெற்றது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற இந்த நடைபவனி 3 கிலோமீற்றர் தூரம் வரை சென்றது என்று தேர்தல் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிகழ்வில் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், கிராம அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

பல்வேறு இன, மத, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத்துடன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

பதாகைகளும் ஏந்திச் செல்லப்பட்டன. மும்மொழிகளிலுமான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

பொதுவாக இடம்பெறுகின்ற அரச வைபவங்களில் பின்பற்றப்படாத மும்மொழிக் கொள்கை வாக்காளர் தின நிகழ்வுகளில் பின்பற்றப்பட்டமையால் தென்னிலங்கை வாழ் தமிழர்கள் பலரும் நன்மை அடைந்ததாக தெரிவித்தனர்.

''பொதுமக்கள் இறைமையும் வாக்குரிமையும் என்ற தொனிப்பொருளில் சட்டமா அதிபர் பாலிக பெர்னாண்டே உரை நிகழ்த்தினார். (ச-ரி)

# விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி, ஜூன் 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த நால்வர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீசாலையில் இடம்பெற்ற வீதி விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த சங்கரலிங்கம் விமல் (வயது-26), மட்டுவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் சில்லு வீதியில் சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு சரசாலை மத்தியைச் சேர்ந்த செல்லப்பா கந்தசாமி (வயது-50), மகாலிங்கம் (வயது -52) ஆகியோரும் -

சாவகச்சேரிப் பகுதியில் வீதியைக் கடக்க முயன்றபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா மணிமலர் (வயது-50) ஆகியோர் காயமடைந்தனர். இவர்களில் ச.விமல், செ.கந்தசாமி ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-9)

# காதல் விவகாரத்தால் கையை அறுத்த யுவதி

யாழ்ப்பாணம், ஜ"ன் 03

தனது இரு கைகளையும் பிளேற்றினால் தாறுமாறாக வெட்டியதால்படுகாயமடைந்த யுவதி ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது.

குறித்த யுவதி ஓர் இளைஞனைக் காதலித்து வந்துள்ளார். ஆயினும் இவர்களின் காதல் விவகாரம் யுவதியின் ஒன்றுவிட்ட சகோதரருக்கு பிடிக்கவில்லை. இந்த நிலையில் தனது பிறந்த தினத்தை ஒட்டி வழிபாடு செய்வதற்காக கடந்த சனிக்கிழமை குறித்த யுவதி நல்லூர் ஆலயத்துக்கு சென்றுகொண்டிருந்தார். அப்போது ஓட்டோவில் வந்த யுவதியின் சகோதரன் அவரை பலவந்தமாக அதில் இழுத்து ஏற்றிக் கொண்டு சென்று விட்டார். பின்னர் யுவதியின் மாமனாரின் வீட்டில் அவரை தங்க வைத்தார். எனினும் நடந்தது எதையும் அறியாத யுவதியின் பெற்றோர் தமது மகளைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதன் பின்னர் சகோதரரால் நேற்றைய தினம் மீளவும் இந்த யுவதி வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டார். இதனால் விரக்தியுற்ற யுவதி தன் கையை வெட்டிப் படுகாயப்படுத்தி யுள்ளார். கையிலிருந்து அதிகளவு குருதி வெளியேறிய நிலையில் அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஙு-78)

# பொலிஸாருக்க எதிராக மானிப்பாய் வாசி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜ"ன் 03

எந்தவிதமான காரணமும் தெரிவிக்காது தனது வீட்டினுள் பொலிஸார் அத்துமீறி நுழைந்ததுடன் தேடுதலும் நடத்தியமை தொடர்பில் குறித்த வீட்டில் வசித்து வருபவரான அரச உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தத் தகவலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.சுதுமலை வடக்கு, மானிப்பாயில் உள்ள அரச உத்தியோகத்தரின் வீடு ஒன்றிலேயே கடந்த 25 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிஸார் சென்று இவ்வாறு தேடுதல் நடத்தியுள்ளனர்.

தான் ஒரு அரச உத்தியோகத்தர் என்று குறித்த நபர் தெரிவித்தார் என்றும் ஆயினும் அவரது அனுமதி பெறப்படாமலும் தேடுதல் நடத்தப்பட்டதாகவும் எனினும் தேடுதலுக்கான காரணம் எதுவும் இதுவரை கூறப்படவில்லை என்று கடந்த 27 அம் திகதி உத்தியோகத்தர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கனகராஜ் மேலும் தெரிவித்தார். (4)

# இலங்கை இனப்படுகொலை கனடாவில் ஓவியக் கண்காட்சி

இலங்கை அரசால் மேற் கொள்ளப்பட்ட இனப்படு கொலைகளை ஆவணப்படுத் தும் மாபெரும் ஓவியக் கண் காட்சி கடந்த ஒரு மாதகால மாக கனடாவில் உள்ள 7 பல்கலைக்கழகங்களில் நடத் தப்பட்டுள்ளன.

தழும்பகம் தமிழின அழிப்புக்காட்சியகம் என்ற அமைப்பால் இந்த ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கீர்த்தனா ரத்னம், எஸ்.ராஜன் ஆகியோரின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

''இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புப் படுகொலையால் தமிழ் மக்கள் தமது மரபு வழித் தாயகத்தில் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை ஆவணப்படுத்தும் நோக்குடனேயே தமிழர்களது வரலாறு மற்றும் பாரம்பரிய அடையாளங்களை எதிர் கால சந்ததியினருக்கு எடுத்துக் கூறும் நோக்குடனும் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தமிழர்களின் போராட்ட வரலாறுகளை உணர்வு ரீதியாக வெளிப்படுத்தும் வகையில், இந்த ஓவியங்கள் அமைந்திருந்தன. இந்தக் கண்காட்சியின் ஆவணப்படுத்தல் ஊடாக தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள், தமிழர்கள் சந்தித்த துன்பவியல் நிகழ்வுகள் என்பன காலம்காலமாக ஆவணப்படுத்த வழி ஏற்பட்டுள்ளது'' என்று இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஙு-14)

# முஸ்லிம் தூதுக்குழு பலஸ்தீனம் பயணம்

கொழும்பு, ஜூன் 3

பாலஸ்தீனம், ரம்ல்லாவில் நடைபெறவுள்ள நான்காவது சர்வதேச பைத்துல் முகத்தஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் உயர் மட்ட முஸ்லிம் தூதுக்குழு இன்று திங்கட்கிழமை அங்கு பயணமாகின்றது.

இந்தக் குழுவில் நகர அபிவிருத்திக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷேக் எம்.எம்.எம்.முபாரக் ஊடகவியலாளர் அமீன் இஸ்ஸதீன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ச-ரி)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களாக 239 பேர் நேற்றும் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு , மாவட்டங்களைச் சேர்ந்த 239 பேருக்கு சமுர்த்தி நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 44 பேருக்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த 32 பேருக்கும் சமுர்த்தி நியமனக் கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் வழங்கப்பட்டன. முல்லைத்தீவில் கரைத்துறைபற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பிரதேச செயலக பிரிவில் உள்ள 157 பேருக்கு நியமனக் கடிதங்களை அமைச்சர் ரிசாத் பதியுதீன் வழங்கி வைத்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் 321 பேருக்கு சமுர்த்தி நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பித்தக்கது.

(ஐ-435-4)

# பெண்ணை கொல்ல முயன்றவர் பொலிஸார் சூட்டில் உயிரிழப்பு

பெண் ஒருவரை கத்தியால் குத்திக் கொல்ல முயன்ற நபரை ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சம்பவம் மினுவன்கொட, எல்லங்கல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீடு ஒன்றினுள் இந்தப் பெண்ணை பலியான நபர் கத்தியால் குத்த முற்பட்டபோது, அவரிடமிருந்து குறித்த பெண்ணைக் காப்பாற்றும் முகமாக பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டிலேயே இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

# நியாயமான உரிமைகளுக்கு குரல் கொடுத்தவர் ஜயலத்

## இரங்கல் செய்தியில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 3

தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்காக அச்சமின்றி குரல் கொடுத்த வந்த அரசியல் தலைவர் ஜயலத் ஜயவர்த்தன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங் கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும், சிறந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

ஒரு மனிதனின் வாழ்வின் பெறுமதி இறப்பின் பின்பே எடை போடப்படுகின்றது எனச் சொல்லப்படுவதுண்டு. ஆனால், இவர் வாழ்ந்த போதும் சரி, இறந்த பின்பும் சரி தனித்துவமான கௌரவத்தையும், மக்களின் நம்மதிப்பையும் பெற்றுள்ளார் என்பது எவராலும் மறுக்கப்படமுடியாத உண்மையாகும்.

வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன ஓர் அரசியல்வாதி என்பதற்கு அப்பால் தீவிரமான, நேர்மையான ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் உண்மையான ஒரு கிறிஸ்தவராகவும் நிமிர்ந்து நின்று பணியாற்றியவர் இவர். இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களையும் மனித குல விரோத நடவடிக்கைகளையும் சர்வதேச அரங்குக்குக் கொண்டு செல்வதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசேப் பரராஜசிங்கத்துடன் இணைந்து அளப்பெரிய பணிகள் ஆற்றியமையை நாம் என்றுமே மறந்துவிட முடியாது. இத்தகைய செய்பாடுகள் காரணமாக அமரர் ஜோசேப் பரராஜசிங்கம் மனித குல விரோதிகளால் நத்தார் தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட போதும் இவர் தனது மனிதநேயப் பணிகளைத் துணிச்சலுடனும் தொய்வின்றியும் தொடர்ந்தார்.

தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்பதிலும் தீவிர அக்கறை காட்டி வந்தவர். சுனாமிப் பேரழிவு ஏற்பட்ட போது நிவாரணப் பணிகளில் நேரடியாக இறங்கிச் செயற்பட்டு தமிழ் மக்களுக்குப் பேருதவி புரிந்தவர். போர் நெருக்கடிகள் மிகுந்திருந்த காலத்தில் கூட பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வடபகுதிக்கு பயணம் மேற் கொண்டு தமிழ் மக்கள் மீதான தனது நல்லெண்ணத்தைப் பகிர்ந்து கொண்டார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கை அரசு தனது பொய்ப் பிரசாரங்கள் மூலம் மனிதகுல விரோத நடவடிக்கைகளையும் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் சர்வதேச அரங்கில் மறைக்க எடுத்த முயற்சிகளையும் அம்பலப்படுத்தவதில் இவர் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

சர்வதேச தேசிய மட்டங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு மனித உரிமைகள் செயற்பாட்டாளராகவும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்காக அச்சமின்றிக் குரல் கொடுக்கும் ஒரு நேர்மையான அரசியல்வாதியும் விளங்கிய



கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவின் எதிர்பாராத இழப்புக் காரணமாக ஏற்பட்ட துயரத்தில் அவரது குடும்பத்தினருடன் இணைந்து நாமும் பங்கு கொள்கிறோம்.

அவர் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைத் தொடர்வதன் மூலம் என்றும் அவரை எம்முடன் வாழவைப்போம் என உறுதி செய்கிறோம்.

''ஒரு மனிதன் எத்தனை வருடங்கள் வாழ்ந்தான் என்பதை விட அவன் வாழ்ந்த காலத்தில் அவனின் வாழ்வு எவ்வளவு தூரம் மனிதகுலத்துக்குப் பயனுள்ளதாக அமைந்தது என்பதே முக்கியமாகும்''- என்றுள்ளது. (ஐ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை பிராந்திய அரசுகள் கைக்கொள்ளுமா...?

உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான சீனாவின் முத்துமாலை வியூகத்தில், அது கண் வைத்துள்ள தேசங்களில் பாகிஸ்தானும் ஒன்றாகும். தனது இராணுவ மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான வசதிகளை கடல்வழியாகத் தொடர்புபடுத்தும் செயற்பாடே சீனாவின் முத்துமாலை (String of Pearls) வியூகம்.

குறிப்பிட்ட அந்த வியூகத்தில், பாகிஸ்தானுக்கு அடுத்து இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு, சோமாலியா ஆகிய நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கடந்த வாரம் நடைபெற்ற பாகிஸ்தான் தேர்தலில் வெற்றி ஈட்டிய பிரதமர் நவாஷ் ஷெரிப்பை , தனது பக்கம் வளைத்துப் போடுவதற்கு சீனா முயற்சிக்கும் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதேவேளை, பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவி ஏற்கவுள்ள நவாஸ் ஷெரிப் இந்தியாவுடன் நல்லுறவைக் கட்டி எழுப்புவதற்கு ஈடுபடுவார் என்று எதிர்வு கூறப்படுகிறது.

நவாஷ் ஷெரிப் ஏற்கெனவே தமது நாட்டின் பிரதமராக இரண்டு தடவைகள் பதவி வகித்தவர். அந்த நாட்டில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாகப் பதவி வகித்த பாகிஸ்தான் மக்கள் கட்சியைத் தோற்கடித்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர், முன்னர் பிரதமராக இருந்த வேளையில், இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதில் மிகுந்த ஆர்வம் காட்டியவர். அதே வழியில், தமது இப்போதைய பதவிக் காலத்தில் அந்தப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டுவார் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள்.

எவ்வாறெனினும் இந்த முயற்சிக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாதது. பாகிஸ்தான் அரசியலில் இராணுவம் இப்போதும் பலமுள்ளதாகவே இருக்கிறது. இந்தியாவுடன் நல்லுறவு என்பது பாகிஸ்தான் இராணுவத்துக்கு கசப்பானது என்பது மிக வெளிப்படையானது.

1999 இல் இந்தியாவுடன் நல்லுறவு முயற்சியில் நவாஸ் ஷெரிப் ஈடுபட்டிருந்த வேளையில், அவரின் அனுமதியின்றியே, அப்பொழுது இராணுவத் தளபதியாக இருந்த பெர்வெஸ் முஷாரப் கார்கிலுக்குப் படைகளை அனுப்பினார்.

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு கஷ்மீரின் ஒரு பகுதியான கார்கில்ஸில் இடம்பெற்ற போரில் இந்தியா இறுதியில் வென்றபோதிலும், நூற்றுக்கணக்கான படையினரை இழந்தது. கார்கில்ஸ் போர் நடைபெற்று ஐந்து மாத காலத்தில் நவாஸ் ஷெரிப் இராணுவச் சதி மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார். இந்தியா தொடர்பாக நவாஸ் ஷெரிப்பின் அப்போதைய அணுகுமுறையே அதற்குக் காரணம்.

இனிமேலும், நவாஸ் ஷெரிப்பின் ஆட்சியின் கீழ், கஷ்மீர் பிரச்சினையோ அல்லது இஸ்லாமிய கடும்போக்கு அமைப்பான லஷ்கர்-ஈ-தைபா பிரச்சினையோ தீரும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆயினும் எல்லையில் நிலவும் நெருக்கடி தளரவும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. எல்லையில் அமைதி நிலவினால் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தைக் குவித்து வைக்கும் நிலைமை நீங்கும். அந்த நாட்டின் வரவு- செலவுத் திட்டத்தில் செலவீனத்துக்கான ஒதுக்கீடுகளைக் குறைக்க முடியும்.

கஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் 1947 இலும், 1965 இலும் இரண்டு போர்களை நடத்திவிட்டன. பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. கஷ்மீர் தொடர்பான ஐ.நா. தீர்மானத்தையும், இந்தியா கனம்பண்ணத் தவறிவிட்டது. எனினும், கஷ்மீர் தொடர்பாக இரு நாடுகளும் மீண்டும் ஒரு போருக்குச் செல்லும் வாய்ப்பு அரிதாகவே காணப்படுகிறது.

அதேவேளை, நவாஸ் ஷெரிப்பின் கோட்டையாகக் கருதப்படும் பஞ்சாப்பின் லாகூரைத் தலைமையகமாகக் கொண்ட கடும்போக்கு தீவிரவாத இயக்கமான லஷ்கர்-ஈ-தைபா, நவாஸ் ஷெரிப்பின் இந்தியாவுடனான நல்லுறவு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். 2008 இல் மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 160 பேர் கொல்லப்படுவதற்கு இந்த அமைப்பே காரணம்.

பாகிஸ்தானின் உளவு ஏஜென்ஸியுடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டது இந்த அமைப்பு. கஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பாகிஸ்தான் இராணுவத்தால் இது பயன்படுத்தப்படுவது மிகவும் வெளிச்சம்.

பதவி விலகும் பாகிஸ்தான் மக்கள் கட்சியுடனான உறவைவிட, பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கா-ஈ-தைபா போன்ற கடும்போக்கு இஸ்லாமிய இயக்கங்களுடன் நவாஸ் ஷெரிப்புக்கு நெருக்கமான உறவு உண்டு.

ஆயினும், லஷ்கர்-ஈ-தைபா அமைப்பு இந்தியாவில் மீண்டும் தாக்குதல் நடத்தினால் நவாஸ் ஷெரிப்பின் நல்லுறவு முயற்சிகள் பலனளிக்காது போகலாம்.

அதே போன்று இந்தியாவுடன் நல்லுறவு பேணுவதற்காக கஷ்மீர் மக்களை விலைபேச முடியாது. அது பாகிஸ்தானில் இராணுவத்தை மீண்டும் அரசியலில் தலையிட வழி செய்யும்.

இந்தியாவின் பிரதமராக வாஜ்பாய் பதவி வகித்த காலத்தில் பாகிஸ்தான் சென்று 'லாகூர் பிரகடனம்' என்ற பெயரில் அணு ஆயுதப் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்தார்.

அதே போன்ற ஒன்று மீண்டும் உண்டாகுமா என்பதற்கு காலமே பதில் சொல்லும். வேண்டுமானால் இரு நாட்டு அரசுகளும் முயற்சி செய்யலாம். எனினும், இந்தியா-பாகிஸ்தான் உறவுகளைத் தீர்மானிக்கும் காரணிகளாக, பிராந்திய நாடுகளின் கள நிலைமைகளும் முரண்பாடற்ற ஆக்கபூர்வமான அணுகு முறைகளுமே அமையும். அதன் பொருட்டு , சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் ஒருமுகப் பட்டுச் செயற்படுவது அவசியம்; தவிர்க்க முடியாதது.

# உணவகங்களின் சுகாதாரத்தை உறுதி செய்ய விசேட செயற்றிட்டம்

## சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில்

வடமராட்சி, ஜூன் 3

நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் செயற்படும் உணவகங்களில் சுகாதாரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான விசேட செயற்றிட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுகள் போசனை மிகுந்ததாகவும், அதனை உட்கொள்வோர் தொற்றாதநோய் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலும் இதற்கான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

உணவகங்களின் சுகாதாரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் அடங்கிய நூல் ஒன்றையும் சகல அரச, தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தகைய உணவகங்களில் தற்போது விற்பனை செய்யப்படும் உணவுகளில் எண்ணெய், உப்பு மற்றும் சீனி மிகுதியாகக் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் போசணைப் பிரிவு தெரிவித்துள்ளது. அத் தன்மைகள் நீரிழிவு, இருதய நோய் உட்பட பல நோய்கள் ஏற்பட வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க தொழில் நிறுவன உணவகங்களில் உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் நுகர்வோர் கவனத்துக்காக 4 விதமான சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(வ-8)

## நல்லூர்ப் பகுதி கிறிஸ்தவருக்கென 70 பரப்பு காணியில் சேமக்காலை

### பிரதேச சபை ரூ.26 லட்சத்துக்கு கொள்முதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

நல்லூர் பிரதேச சபை கிறிஸ்தவ மக்களுக்கான சேமக்காலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென கட்டை ஆலடி சுடலைப் பகுதியில் எழுபது பரப்பு காணி ரூபா 26 லட்சம் ரூபா செலவில் பிரதேச சபை கொள்முதல் செய்துள்ளது என்று தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பகுதியில் கிறிஸ்தவ மக்களுக்கென சேமக்காலை இல்லாததால் கிறிஸ்தவ மக்கள், தமது உறவுகளின் உடல்களை அடக்கம் செய்ய வேறு இடங்களை நாட வேண்டியுள்ளது. அதனால் கிறிஸ்தவர்களின் வசதி கருதி நல்லூர் பகுதியில் சேமக்காலை ஒன்றை அமைக்க பிரதேச சபை நட வடிக்கை எடுத்திருக்கிறது.

இது தொடர்பாக சபைக் கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## நோயாளர் நலன்புரி சங்கங்களை பதிவு செய்யக் கோரிக்கை

அச்சுவேலி, ஜூன் 3

வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டுள்ள ''நோயாளர் நலன்புரி சங்கங்கள்'' பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்வது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் சகல பிரதேச செயலகங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்வதற்கான படிவங்களை சமூக சேவைகள் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய சாலைகளில் இதுவரை காலமும் செயற்பட்டு வந்த வைத்தியசாலை அபிவிருத்திசபை கட்டமைப்புக்கு பதிலாக ''வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்க'' கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை அபிவிருத்திக் கட்டமைப்புகள் பதிவு செய்யப்படாத நிலையில் செயற்பட்டு வந்தன.

நோயாளர் நலன்புரி சங்க கட்டமைப்பு சமூக சேவையுடன் தொடர்புபட்ட நிலையில் செயற்பட இருப்பதால் சமூக சேவை திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களில் பதிவு செய்து அதற்கான பதிவிலக்கத்தை பெற்று உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். நலன்புரி சங்கத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்களில் பதிவிலக்கம் இடம்பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ-11)

### வெசாக் தினத்தில் மன்னாரில் மதுபானம் விற்றோருக்கு தண்டம்

மன்னார், ஜூன் 3

மன்னார் மாவட்டத்தில் வெசாக் காலத்தில் மதுபானம் விற்பனை செய்த 9 பேருக்கு 14 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம், 25 ஆம் திகதிகளில் வெசாக் தினத்துக்காக மதுபானசாலைகள் மூடப்பட வேண்டும் எனவும் மதுபான விற்பனைகள் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் மதுவரித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மன்னார் மாவட்டத்தில் வெசாக் காலத்தில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர். (வ-14)

### ஆலயத்துக்கு காணி அன்பளிப்பு

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்துக்கு ஓர் ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஆலயச் சுற்றாடலுக்கு அருகில் காணப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமரர் இராஜலிங்கத்தின் நினைவாக அவரது குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கும் ஆலயத்தின் பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் வகையில் உறுதிப் பத்திரம் தயாரிக்கப்பட்டு ஆலய தர்மகர்த்தா சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-9)

# பெற்ற பிள்ளைகள் வெளிநாடுகளில் வயதான பெற்றோர் 'நடுத்தெருவில்'

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

பிள்ளைகள் அனைவரும் வெளிநாடுகளில் வசிப்பதால் உள்நாட்டில் உள்ள வயதான பெற்றோர்கள் பணம் இருந்தும் கவனிப்பாரின்றி கஷ்டப்படுகின்றனர் என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வயதான பெற்றோர்கள் இங்கு தங்கி வாழ்கிறார்கள். அவர்களது பிள்ளைகள் அனைவரும் வெளிநாடுகளில் உள்ள நிலையிலேயே பிள்ளைகளின் கவனிப்பு, ஆதரவின்றி கஷ்டப்படுகின்றனர். வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகள் இங்குள்ள தமது பெற்றோருக்குத் தேவையானளவு பணம் அனுப்புகிறார்கள். பெற்றோரும் தமது பிள்ளைகளின் புகைப்படங்களை சட்டகம் செய்து சுவரில் தொங்க விட்டுக் காட்சிப்படுத்தியிருக்கின்றனர். அவர்களது வீடுகளுக்குச் செல்லும் போது அதனைச் சுட்டிக் காட்டி குறித்த நாடுகளில் உள்ளனர் என்று கூறி பெருமைப்படுகின்றனர். அவர்களது அந்தச் சந்தோசம் வரவேற்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் அந்தப் பெற்றோரைக் கவனிக்க எவருமில்லை.

வயதான பெற்றோர் தேவையானளவு பணம் இருந்தும் தம்மைப் பராமரிக்க எவருமில்லையே என்று தான் வருந்துகிறார்கள். சில பெற்றோர் சமைக்கக் கூட முடியாத நிலையில் அயல் வீடுகளில் உள்ளவர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் மூலமாக உணவு சமைத்து அதனையே பெற்று உண்கிறார்கள். அயல்வீட்டுக்காரர்களே அத்தகைய பெற்றோருக்கு உதவுகிறார்கள்.

இது தவிர இவ்வாறு பிள்ளைகள் இன்றி இங்கு வாழ்ந்து வருபவர் களது வீடுகளுக்குச் செல்லும் திருடர்களும் இலகுவாக அச்சுறுத்தி விட்டும் அவர்களைக் கொலை செய்து விட்டும் பொருள்களை அபகரித்துச் செல்கின்றனர். எனவே பிள்ளைகள் இது தொடர்பில் அவ தானம் செலுத்த வேண்டும்- என்றார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதன்போது பங்குத் தந்தை றோய் பேடினன்ற் அடிகள் தலைமையில் திருச்செபமாலை வழிபாடு இடம்பெற்றது. இதிலே நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றினர். (ஙு-51)

## யாழ். மாவட்ட உயர் கணக்கியல் பட்டதாரிகள்

# வழக்கை திரும்பப் பெற்றால் அடுத்த மாதமே நியமனம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கை உயர் தொழில்நுட்பக் கணக்கியல் பட்டதாரிகள் திரும்பப் பெற்றால் அடுத்த ஒரு மாதத்திலேயே அவர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் - இவ்வாறு உறுதிமொழி அளித்துள்ளார் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ.

யாழ். மாவட்ட சுதந்திர பட்டதாரிகளுடனான கலந்துரையாடல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

கலந்துரையாடலின் போது பட்டதாரிகள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறலாமென்றும் அதற்கு நாமல் ராஜபக்ஷ பதிலளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

பட்டதாரிகளின் கேள்விக்கு நாமல் ராஜபக்ஷவின் பணிப்புக்கமைய அதிகாரிகள் பதிலளித்தனர். அதன் போது.

உயர் தொழில்நுட்ப கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் ''எமக்கு நியமனம் இதுவரை ஏன் தரப்படவில்லை? விரைவில் எங்களுக்கும் நியமனம் வழங்குவீர்களா?'' என்று கேட்டனர்.

அதற்குபதிலளிக்கும் போதே ''நீங்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கை திரும்பப் பெற்றால் அடுத்த ஒரு மாதத்திலேயே நிரந்தர நியமனம் வழங்குவோம்'' என்று பதிலளிக்கப்பட்டது.

எனினும் இந்தப் பதில் குறித்து பட்டதாரிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில் ''முன்னைய அரசுகள் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் பின்னடித்து வந்துள்ளன. ஆனால் நாம் அதனை இப்போது வழங்கி வருகிறோம். ஒரு சில மாதங்களில் மாத்திரம் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியுள்ளோம். 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 68 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியுள்ளோம். அரசியல் ரீதியாகப் பேசுவது நோக்கமல்ல. தேவைகளை நன்குணர்ந்து நிறைவேற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கையில் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பிரச்சினைகள் உள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தினூடாக அதனைத் தீர்த்து வைப்பேன்'' என்றார் அவர்.

நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் . யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை உயர் தொழில்நுட்ப கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நாடளாவிய ரீதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள 250 பேருக்கு மாத்திரம் நியமனம் வழங்கப்படவில்ல. தமக்கும் இவ்வாறு நியமனம் வழங்குமாறு கோரியே 250 பட்டதாரிகளும் உயர் நீதிமன்றில் கடந்த வருடம் ஜூலை மாதம் வழக்குத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஙு-4)

## காணாமற்போனவர் தூக்கில் சடலமாக மீட்பு

புதுக்குடியிருப்பு, ஜூன் 03

வீட்டிலிருந்து காணாமல் போனவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

முள்ளியவளை கருநாட்டுக் கேணியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை-உதயகுமார்(வயது-40) என்பவரே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த திங்கட்கிழமை வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் நேற்று வரை வீடு திரும்பவில்லை. இதனை அடுத்து இவர் காணாமல் போனமை தொடர்பாக அவரது மனைவியால் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சூழ் நிலையில் கருநாட்டுக் கேணியிலுள்ள அவரது வீட்டுக்கு அண்மையிலுள்ள காட்டுப்பகுதியிலுள்ள அத்தி மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். (ஙு-400)

## மகளை மீட்டுத் தருமாறு நாமலிடம் கெஞ்சிய தாய்

யாழ்ப்பாணம், ஜூன் 03

கிளிநொச்சியில் வைத்து காணாமற்போன தனது மகளை மீட்டுத்தருமாறு தாய் ஒருவர் நாமல் ராஜபக்ஷவிடம் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பட்டதாரிகள் மாநாட்டில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடமே தாய் ஒருவரினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தனது மகள் கிளிநொச்சியிலுள்ள சுதந்திரக்கட்சி அலுவலகத்துக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி வந்தபோது கடந்த ஜனவரி மாதம் முதல் காணாமற்போயுள்ளார் என்றும் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இது வரையும் எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை என்றும் அந்தத் தாய் நாமலிடம் தெரிவித்தார்.

உடனடியாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரை அழைத்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார். (ஙு-400)


## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு தங்கரத்தினம்



சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு தங்கரத்தினம் நேற்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுமாரனின் (ஓய்வு பெற்ற நில அளவை அதிகாரி, வவுனியா) அன்புத் தாயும், யோகி (HNB, முல்லைத்தீவு), துசிதரா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2013) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

[illegible]

0772201130

(சீ/9586)(14.9.7)


# கேப்பாபிலவில் மீளக்குடியேற்று பிள்ளையாரிடம் கதறிய மக்கள்

புதுக்குடியிருப்பு, ஜூன் 03

கேப்பாப்பிலவைச் சேர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியர்த்துவதற்கு அருள்புரிய வேண்டும் என கேப்பாப்புலவு கொட்டடி விநாயகப் பெருமானிடம் கதறி அழுது நேற்று முறையிட்டனர்.

கேப்பாப்பிலவு மக்கள் கடந்த 5 வருடங்களின் பின் தமது சொந்த இடங்களுக்கு இராணுவத்தின் பாதுகாப்புடன் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போதே மக்கள் தமது மனதில் இருந்த கவலைகளை விநாயகப் பெருமானின் முன் கொட்டித்தீர்த்தனர்.

இறுதிக்கட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்த கேப்பாப்பிலவு மக்கள் செட்டிக்குளம் மெனிக் பாம் முகாமில் தங்கவைக்கப் பட்டனர். பின்னர் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட போதும் கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் சூரியபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கேப்பாப்பிலவின் பெரும் பகுதியை தனது தேவைகளுக்காக கையகப்படுத்தி வைத்துள்ள இராணுவத்தினர் அந்தப் பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். அந்தப் பகுதிக்கு மக்கள் செல்வதற்கும் படையினர் தடை விதித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள கொட்டடி விநாயகர் ஆலயத்தில் விசேட வழிபாடு செய்வதற்கு அனுமதிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதனை அடுத்து இராணுவத்தின் பாதுகாப்புடன் சுமார் 14 உழவு இயந்திரங்களில் மக்கள் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

மக்களுடன் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மார்க். முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி சமரசிங்க உட்பட பல இராணுவ அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

உழவு இயந்திரங்களில் செல்லும் போது சொந்த வீடு வாசல்களை பார்த்த மக்கள் கண்ணீர் விட்டு கதறி அழத் தொடங்கி விட்டனர். அதுமட்டுமல்லாது ஆலயத்திற்குள் சென்ற மக்கள் தமது சோகம் தாங்கமுடியாது கதறி அழுதபடி தமது சொந்த இடங்களுக்கு சென்று குடியமர்வதற்கு அருள்பாலிக்குமாறு மன்றாடினர். (ஙு-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மதுபானங்கள் குடாநாட்டில் அமோகம்

## கடந்த வருடம் குடித்துத் தீர்த்தனர் 71 ஆயிரம் லீற்றரை

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 71 ஆயிரத்து 336 லீற்றர் வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதற்கமைவாக ஏனைய பியர், சாராயம், கள்ளு என்பவற்றைவிட வெளிநாட்டு மதுபானங்கள் மிகக் குறைந்தளவே விற்பனை செய்யப்பட்டுள்ளன. விஸ்கி, ப்ராண்டி, ஜின், ரம் போன்ற வெளிநாட்டு மதுபானங்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளன.


மதுவரித் திணைக்களத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

எனினும் 2011ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட மதுபானத்தைவிட கடந்த வருடம் மிகக் குறைந்தளவே விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடந்த 11 வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2005ஆம் ஆண்டு 18 இலட்சத்து 48 ஆயிரத்து 50 லீற்றர் மதுபானம் மிகக் கூடுதலாகவும் 2010ஆம் ஆண்டு 52 ஆயிரத்து 950 லீற்றர் மதுபானம் மிகக் குறைவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2002ஆம் ஆண்டு 5 இலட்சத்து 60 ஆயிரத்து 136 லீற்றரும், 2003 ஆம் ஆண்டு 13 இலட்சத்து 94 ஆயிரத்து 514 லீற்றரும், 2004ஆம் ஆண்டு 14 இலட்சத்து 69 ஆயிரத்து 169 லீற்றரும், 2005ஆம் ஆண்டு 18 இலட்சத்து 48ஆயிரத்து 50 லீற்றரும், 2006ஆம் ஆண்டு 6 இலட்சத்து 48 ஆயிரத்து 717 லீற்றரும், 2007 ஆம் ஆண்டு 80 ஆயிரத்து 684 லீற்றரும், 2008ஆம் ஆண்டு 10 இலட்சத்து 3 ஆயிரத்து 831 லீற்றரும், 2009 ஆம் ஆண்டு 7 இலட்சத்து 69 ஆயிரத்து 220 லீற்றரும், 2010ஆம் ஆண்டு 52 ஆயிரத்து 950 லீற்றரும், 2011 ஆம் ஆண்டு 73 ஆயிரத்து 702 லீற்றரும், 2012ஆம் ஆண்டு 71 ஆயிரத்து336 லீற்றரும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (வ-14)

## உணவு கையாளும் நிலையங்களில் தரத்தை மேம்படுத்த மாநகர சபை தீவிரம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

உணவு கையாளும் நிலையங்களின் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை தீவிரப்படுத்தியுள்ளது. இதற்கென எச்-800 படிவம் சகல நிலையங்களுக்கும் வழங்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் செயற்பாடுகளை யாழ்.மாநகர சபை தனது எல்லைக்குள் முன்நிலைப்படுத்தியுள்ளது.

மேலும் புதிய தர நிர்ணயம் செய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

உணவு கையாளும் சகல நிலையங்களுக்கும் வழங்கப்படவுள்ள சான்றிதழ்களை நிலையங்களின் முன்பாக பார்வையிடத்தக்கதாக வைக்க வேண்டும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

> “ ஏற்கனவே ஏ தரம் சான்றிதழ் பெற்ற உணவு கையாளும் நிலையங்கள் சில தரம் சீயை எட்டியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே ஏ தரம் சான்றிதழ் பெற்ற உணவு கையாளும் நிலையங்கள் சில தரம் சீயை எட்டியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (வ-9)

## பரிசோதனையின் பின்னரே மாடுகளை வெட்ட அனுமதி

### சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 3

சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் பொதுச் சந்தையில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் இறைச்சிக்கு வெட்டுவதற்காகக் கொண்டுவரும் மாடுகள் 24 மணி நேரத்துக்கு முன்னர் பிரதேச சபையால் குறித்து ஒதுக்கப்படும் இடங்களில் கட்டப்பட வேண்டும் எனவும்-

வெட்டப்படும் மாடுகள் பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரை பெற்று பிரதேச சபையில் அனுமதி பெற்ற பின்னரே கொல்களத்தில் வெட்டப்பட வேண்டும் எனவும்-

பிரதேச சபைத் தலைவரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொல்களத்தில் சட்ட திட்டங்களுக்கு அமைவாக மாடுகள் வெட்டப்படுவதில்லையென பிரதேச பொது சுகாதார பரிசோதகரால் பிரதேச சபைத் தலைவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

அதையடுத்து வெட்டப்படும் மாடுகள் கச்சாய் அலுவலகம் மற்றும் கொடிகாமம் சந்தைப் பகுதி போன்ற இடங்களில் பொது மக்களுக்குத் தெரியக் கூடிய வகையில் 24 மணி நேரத்துக்கு முன்பாக கட்டப்படல் வேண்டும். பொது சுகாதார பரிசோதகர் மாட்டை பரிசோதனை செய்து பரிந்துரை செய்த பின்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அனுமதி பெற்று கொல்களத்துக்கு கொண்டு செல்லப் படல் வேண்டுமென தலைவர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நேற்றுமுன்தினம் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டு ஆசிர்வதிக்கப்பட்டது. அருட்தந்தை தேவதாஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியைத் தொடர்ந்து அருட்தந்தை ஜெக்ஸ்சவுந்தரம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆயர் மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர் நவமயினி உட்பட பலர் உரையாற்றினார்கள். (ஓ-86)

## தென்மராட்சி பாடசாலைகளை புனரமைக்க அமைச்சால் நிதி

தென்மராட்சி, ஜூன் 3

தென்மராட்சி கல்வி வலயத்தில் பாடசாலைக் கட்டடங்களில் ஏற்பட்டுள்ள சிறு திருத்த வேலைகளைப் புனரமைக்க மாகாணக் கல்வி அமைச்சு 3 மில்லியன் ரூபாவை விடுவித்துள்ளது.

இவற்றுக்கு மேலாக வலயத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளின் கட்டடத் திருத்த வேலைகளுக்கென 3 லட்சம் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விவரங்கள், மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ-9)

## கொடிகாமம் வைத்தியசாலைக்கு விரைவில் அம்புலன்ஸ்

தென்மராட்சி, ஜூன் 3

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இங்குள்ள அம்புலன்ஸ் பழுதடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உள்ளதால் யாழ். மாவட்டத்துக்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ள ஒரு தொகுதி அம்புலன்ஸ்களில் ஒன்றை கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இந்தத் தகவலை தெரிவித்தார். (வ-9)

> “ இங்குள்ள அம்புலன்ஸ் பழுதடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உள்ளது.




### உடுவில் சுகாதார பிரிவுக்குட்பட்ட

## வர்த்தக நிலையங்கள், உணவகங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை

வலி.வடக்கு, ஜூன் 3

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளும் சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு விற்பனைக்கு இருக்கும் உணவுப் பொருள்கள் மற்றும் உணவாக பயன்படுத்தப்படும் தென்னிலங்கையில் இருந்து வரும் பொருள்களையும் பரிசோதனை செய்கின்றனர். சந்தேகமான உணவுப்பொருள்கள் தொடர்பான மாதிரிகளையும் எடுத்துச் சென்று பரிசோதனைக்கு உட்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து பெறப்படும் மாதிரிகள் அநுராதபுரத்தில் அமைந்துள்ள அரச ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அறிக்கைகள் பெற நடவடிக்கைகளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டுக்கு தென்னிலங்கையில் இருந்து எடுத்து வரப்படும் பொருள்கள் பலவும் காலம் கடந்தவையாகவும் உற்பத்தி திகதி மற்றும் முடிவடையும் திகதி என்பன குறிக்கப்படாமல் வர்த்தகர்களால் எடுத்து வந்து வியாபாரம் செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-86)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கான பயிற்சிகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உதவி உத்தியோகத்தர்களுக்கான ஒருவார காலப் பயிற்சி நெறிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின.

நெடுந்தீவு, நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளுக்கான 63 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் குறித்த பயிற்சி நெறிகள் நடைபெற்றன.


இதில் யாழ்ப்பாணம் உதவி சமுர்த்தி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.ரவீந்திரதாஸ், யாழ்ப்பாணம் சமுர்த்தி இணைப்பாளர் எஸ்.ரகுநாதன், ஈ.பி.டி.பி அமைப்பாளர் கமல் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

## யாழ். நகரச் சந்திகளில் விரைவில் ‘சிக்னல்’கள்

வலி.வடக்கு, ஜூன் 3

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளின் சந்திகளில் நிற ஒளிச் சைகைகள் போடுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக [illegible] உரிய சந்திகளை பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம்.ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இத்தகைய ஒளிச் சைகைகள் பொருத்தப்படுவதன் மூலம் வாகனங்களின் சாரதிகளை ஓர் அளவுக்கேனும் வீதி ஒழுங்குகளை பேணச் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஏற்கனவே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப் பாணம் மாநகர சபை இத்தகைய திட்டத்தை நடைமுறைப் படுத்தப் போவதாக அறிவித்திருந்த நிலையில் தற்போது இந்த நடவடிக்கையை பொலிஸார் விரைவு படுத்தியுள்ளனர். (ஓ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இருப்பு அவசியம்

## ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்புக்கு அதுவே சிறந்தது என்கிறது ஜப்பான்

டோக்கியோ, ஜூன் 3

''ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவ இருப்பு அவசியமானது. பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அது சிறந்ததாக அமையும். அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்''- என்று தெரிவித்துள்ளது ஜப்பான்.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் 12ஆவது ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாட்டின்போதே ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் இட்சுனோரி ஓனாடெரா இவ்வாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,

**சிங்கப்பூரில் நடைபெறும் 12ஆவது பாதுபாப்பு மாநாட்டில் 28 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றுகின்றனர்.**

''வலிமை மிகுந்த நாடான ஜப்பான், பிராந்திய பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் தனது பொறுப்பை உணர்ந்து செயற்படும். சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்தும். பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது நாங்கள் பாதுகாப்புக் கொள்கையை மறு ஆய்வு செய்து வருகிறோம். தேசிய பாதுகாப்பு, இராணுவம் தொடர்பான விவகாரங்களை ஆய்வு செய்வதற்காக பாதுகாப்புக் குழுவை அமைக்கவுள்ளோம். ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவத்தின் இருப்பு அவசியமானது. பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

சீனாவுடனான உறவுகளில் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறோம். பிராந்திய அளவில் வல்லரசு என்ற முறையில் தனது பொறுப்பை உணர்ந்து சீனா செயற்பட வேண்டும் என்றே ஜப்பான் எதிர்பார்க்கிறது.'' - என்று தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு சீனக் கடற் பகுதியில் உள்ள தீவு மீது ஜப்பானும், சீனாவும் உரிமை கோரி வருகின்றன. அந்தத் தீவை சென்காகு என்ற பெயரில் ஜப்பானும், டயாவு என்ற பெயரில் சீனாவும் அழைக்கின்றன. அதனால் இருநாடுகளுக்கும் இடையே இராஜதந்திர ரீதியிலான முறுகல் நிலை காணப்படுவது தெரிந்ததே.(ற)

# விஷவாயுத் தொழிற்சாலை ஈராக்கில் கண்டுபிடிப்பு

## பொலிஸார் அதிரடி நடவடிக்கை அல்குவைதாவின் திட்டம் முறியடிப்பு

பாக்தாத், , ஜூன் 3

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இரகசியமாக இயங்கி வந்த இரு விஷவாயுத் தொழிற்சாலைகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

''கண்டுபிடிக்கப்பட்ட தொழிற்சாலையில் சரின், கடுடு போன்ற இரசாயன வாயுக்கள் தயாரிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. பக்தாக்தில் இவ்வாறான இரண்டு தொழிற்சாலைகள் இரகசியமாக இயங்கி வந்திருக்கின்றன. தொழிற்சாலையில் இருந்த 5 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அல்குவைதா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றனர்'' என்று ஈராக் பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் முஹம்மது அல் அஸ்கரி தெரிவிக்கிறார்.

தொழிற்சாலைகளில் கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் மற்றும் கைதானவர்கள் ஊடகங்களுக்குக் காட்டப்பட்டனர்.

''தயாரிக்கப்பட்ட விஷவாயுக்களைப் பயன்படுத்தி ஈராக், ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளில் தாக்குதல் மேற் கொள்ள அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

தூர இருந்து இயக்கும் சிறிய விமானங்களின் மூலம் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் விஷவாயுத் தாக்குதலை மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த விஷவாயுவை சுவாசித்தவர்களின் சுவாசப்பை மற்றும் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு சில நிமிடங்களுக்குள் இறப்பு நேரிடும்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# மூன்று நேட்டோ படையினர் சாவு

காபூல், ஜூன் 3

ஆப்கனின் தென் மற்றும் கிழக்கு பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் 3 நேட்டோ படையினர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இராணுவச் சிப்பாய்கள் எந்த நாட்டவர் என்ற விவரம் எதுவும் தெரியவரவில்லை. தீவிரவாதிகளின் தாக்குதல்களில் கடந்த 6 மாதங்களில் மொத்தம் 55 நேட்டோ படையினர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பசுமை காக்கப் போராட்டம்



துருக்கியில் உள்ள பூங்கா ஒன்றை அகற்றும் அரசின் முடிவை எதிர்த்து ஆயிரக்கணக்கான மக்கள் தொடர் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இஸ்தான்புல்லில் தொடங்கிய இந்த போராட்டம் அன்காரா, இஸ்மிர் ஆகிய நகரங்களுக்கும் தற்போது பரவியுள்ளது. பேராட்டத்தைக் கைவிடுமாறு துருக்கிப் பிரதமர் ரெசெப் தாயிப் விடுத்த வேண்டுகோளை நிராகரித்துள்ள மக்கள் நான்கு நாள்களுக்கு மேலாக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்தான்புல்லில் உள்ள தக்சிம் சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கில் குவிந்த மக்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு மற்றும் தண்ணீர் பீரங்கி கொண்டு தாக்குதல் நடத்தினர். அதில் 50க்கும் மேற்பட்ட பொதுமக்களும், 26 பொலிஸாரும் காயமடைந்தனர். இதுவரை 939 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# படங்கள் கசிந்தமை எவ்வாறு?

## பிஸ்டோரியஸின் சட்டத்தரணி கேள்வி

ஜொகன்னர்ஸ்பேர்க், , ஜூன் 3

சிறப்பு ஒலிம்பிக் வீரர் பிஸ்டோரியஸ், தனது தோழியைக் கொலை செய்தார் என்று கூறப்படும் இடத்தின் புகைப்படங்கள் வெளியானமை குறித்து அவரது சட்டத்தரணி கேள்வியெழுப்பியுள்ளார்.

சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற வீரர் பிஸ்டோரியஸ், கடந்த பெப்ரவரி மாதம் தனது தோழியை திருடர் என்று நினைத்து தவறுதலாக சுட்டுக் கொன்றார் என்று கூறப்பட்டது.

அந்த வழக்கு விசாரணை நடந்து வரும் நிலையில், தோழி கொலையுண்ட இடத்தின் புகைப்படங்கள் பிரிட்டிஷ் தொலைக்காட்சி ஒன்றில் வெளியாகியுள்ளன.

குறித்த புகைப்படங்கள் எவ்வாறு தொலைக்காட்சிக்குக் கிடைத்தன என்பது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் பிஸ்டோரியஸின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (ற)



# புகைபிடிக்க ரஷ்யாவில் தடை

மொஸ்கோ, ஜூன் 3

ரஷ்யாவில் பொது இடங்களில் புகைபிடிப்பதைத் தடை செய்யும் சட்டம் நேற்றுமுன்தினம் நடைமுறைக்கு வந்தது.

அதன்மூலம் பஸ், ரயில் மற்றும் விமான நிலையம், அரச கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், சுகாதார வளாகங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் இனிமேல் ரஷ்யர்கள் புகைபிடிக்க முடியாது. அவ்வாறு புகைப்பிடிப்போருக்கு 1000 ரூபிள்கள் அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

''ரஷ்யாவில் 4 கோடியே 40 லட்சம் பேருக்கு புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளது. புகைபிடித்தல் மற்றும் புகையிலைப் பொருள்களை பயன்படுத்துதல் ஆகியவற்றால் ஏற்படும் நோய்கள் காரணமாக ஆண்டுதோறும் 4 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். குறிப்பாக இளைஞர்கள் பலர் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றனர். இதைத் தடுப்பதற்காகவே இந்தத் தடையை நடைமுறைப்படுத்தியுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார் ரஷ்யப் பிரதமர் திமித்ரி மெத்வதேவ்.

ஆனால் அரசின் இந்த நடவடிக்கைக்கு புகைப்பிடிப்போர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ''புகைப்பிடிப்பது தங்களின் உரிமை. அரசின் நடவடிக்கையை கண்டித்து போராட்டம் நடத்தப்படும்'' என்று அவர்கள் கூறுகின்றனர். (ற)

# அடித்துக் கொல்லப்பட்ட 158 குழந்தைகள்

கெய்ரோ, ஜூன் 3

எகிப்தின் கல்லறைத் தோட்டம் ஒன்றில் நடத்தப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியில், அடித்துக் கொலை செய்யப்பட்ட 158 குழந்தைகளின் எலும்புகள் கண்டறியப்பட்டுள்ளன. கல்லறை தோட்டம் அமைந்துள்ள பகுதியில் ஆராய்ச்சி நடத்தியபோது அங்கு கிடைத்த எலும்புகள் குழந்தைகளின் எலும்புகளை போல சிறிதாக இருந்தன. அவற்றில் பல இடங்களில் முறிவுகள் ஏற்பட்டிருந்தன. அங்கிருந்த எலும்புகளை ஆய்வு செய்ததில் அவை கி.மு. 50இல் இருந்து கி.பி 450க்கு இடைப்பட்ட காலத்தை சேர்ந்தவை என தெரிய வந்துள்ளது.

ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் மத்திய புளோரிடா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் வீலர் இதுகுறித்துக் கூறுகையில்,

''குழந்தைகளின் எலும்புகளில் பல பகுதிகளில் முறிவுகள் ஏற்பட்டுள்ளன. சிதைவடைந்த எலும்புகள் சிறிது வளர்ச்சி அடைந்துள்ளன. அதன் மூலம், இந்த குழந்தைகள் இறப்பதற்கு சில நாள்கள் முன்புதான் இவ்வளவு கொடூரமாக தாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றோம். பெரும்பாலான குழந்தைகளின் கை மேல்பகுதியில்தான் முறிவுகள் அதிகம் உள்ளன. எனவே அவர்கள் கொடூரமாக தாக்கி கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு கொடூரமாக தாக்கப்படுவதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை'' என்று தெரிவித்தார். தற்போது குழந்தைகள் கொல்லப்பட்ட விடயம் குறித்து தொல்பொருள் ஆய்வாளர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். (ற)

# தாக்குதல் இலக்காக இந்தியா

## அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு தகவல்

வோஷிங்டன், ஜூன் 3

பயங்கரவாதத் தாக்குதல்களின் இலக்காகத் தொடர்ந்தும் இந்தியா இருந்துவருகின்றது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் தொடர்பாக 2012ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''இந்தியாவில் கடந்த ஆண்டு நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்களில் 805 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 364 பேர் மாவோயிஸ்ட் அல்லது நக்சலைட்டுகளின் தாக்குதல்களுக்கு உயிரிழந்தனர். நக்சல் பயங்கரவாதத்தைத் தனது மிகத் தீவிரமான உள்நாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இந்திய அரசு கருதுகிறது. எனினும் இந்தக் குழுக்கள் அமெரிக்கா அல்லது வேறு எந்த சர்வதேச நாட்டையும் குறிவைத்துத் தாக்கவில்லை.

எனினும் இந்தியாவில் 2011 ஆம் ஆண்டை விட 2012 ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 25 சதவீதம் குறைந்துள்ளது. எனினும், பயங்கரவாதத் தாக்குதல்களின் இலக்காக இந்தியா தொடர்ந்து இருந்து வருகிறது.

**2012இல் காஷ்மீரில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களுக்கு லஷ்கர்-இ-தொய்பா போன்ற பாகிஸ்தானால் ஆதரிக்கப்படும் பயங்கரவாத அமைப்புகளே காரணம் என்று இந்தியா கருதுகின்றது.**

லஷ்கர்-இ-தொய்பா போன்ற சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் தொடர்ந்து குறிவைக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா நீடிக்கிறது. 2012இல் காஷ்மீரில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களுக்கு லஷ்கர்-இ-தொய்பா போன்ற பாகிஸ்தானால் ஆதரிக்கப்படும் பயங்கரவாத அமைப்புகளே காரணம் என்று இந்தியா கருதுகின்றது.

இந்தியா தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை அமைக்க முயற்சித்தபோதிலும், சில மாநில அரசுகளின் எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சிகள் தடைப்பட்டன'' இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் கப்பல்களை அகற்றி மீனவருக்கு பாதுகாப்பு தருக

## மத்திய அரசிடம் பா.ஜ.க. கோரிக்கை

சென்னை, ஜூன் 3



தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் கச்சதீவுப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இலங்கை போர்க் கப்பல்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று இந்திய கடற்படை பாதுகாப்பை இந்திய தமிழ் மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுகளுக்கு தமிழக பாரதிய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, பா.ஜ.க. மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மீன்பிடி தடை காலமான 45 நாள்கள் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது கடலில் அதிக மீன்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தங்களுடைய வாழ்வாதாரத்தை தேடி வங்கக் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு அச்சத்தையும், தங்கள் வருங்காலம் குறித்த கேள்வியையும் எழச் செய்துள்ளது இலங்கை அரசின் அடாவடி நடவடிக்கை.

ஏற்கனவே இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் படும் துயரங்களை அளவிட முடியாத நிலையில் தற்போது கச்சதீவு பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. கச்சதீவு பகுதிக்கு அருகே இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஒரு கப்பல்கூட தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்காக இல்லாத நிலையில் இலங்கையின் 10 இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தமிழக மீனவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்திய நாட்டையே ஆச்சரியங்கொள்ளச் செய்யும் செயலாகவே எண்ண வேண்டியுள்ளது. எல்லை தாண்டிச் செல்லும் மீனவர்களுக்கு இந்திய அரசாங்கமே அபராதம் விதிக்க உள்ளதாக வரும் செய்தி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக உள்ளது. இது குறித்து மத்திய அரசு தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும். -என்றுள்ளது. (வ)

## ஒலியை விட 7 மடங்கு வேகத்தில் இந்தியா தயாரிக்கும் பிரமோஸ்-2




டில்லி, ஜூன் 3

ஒலியைவிட 7 மடங்கு வேகம் கொண்ட அதிநவீன் தொழில்நுட்பத்தில் பிரமோஸ்-2 ஏவுகணை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக என்று புதுடில்லி பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் ஏ.சிவதாணுப்பிள்ளை தெரிவித்தார்.

திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரிக்கு வருகை தந்த அவர், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஒரே சீரான வேகம் மற்றும் உயரத்தில் சென்று எதிரிகளைத் தாக்கும் வல்லமை கொண்ட பிரமோஸ் ஏவுகணை இந்தியாவிடம் மட்டுமே உள்ளது. இது எதிரிகள் எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி குறைந்த அளவு சப்தத்துடன் இயங்கும் திறன் கொண்டது. மிக குறைந்த உயரத்தில் செல்லும் வகையில் இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒலியை விட 3 மடங்கு வேகம் கொண்டது. இதை ரேடார் மூலம் கண்காணிக்க முடியாது. இப்போது, ரூ. ஒரு லட்சத்து 500 கோடியில் அதிநவீன பிரமோஸ்-2 ஏவுகணை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஏவுகணை ஒலியை விட 7 மடங்கு வேகத்தில் செல்லும் திறன் கொண்டதாக இருக்கும். இதன் ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 5 ஆண்டுகளில் இப்பணி முடிவடையும் - என்றார். (வ)

## கனிமொழிக்கு மிரட்டல்; முஸ்லிம் அமைப்பின் பெயரில்

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழிக்கு முஸ்லிம் அமைப்பு ஒன்றின் பெயரில் மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கடந்த 2 தினங்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட இந்த கடிதத்தில் பரபரப்பான வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. உங்களிடம்தான் அதிக பணம் உள்ளதே எங்கள் அமைப்பை வலுப்படுத்துவதற்கு அதில் குறிப்பிட்ட தொகையை நீங்கள் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் உங்களது உயிருக்கு ஆபத்து என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எங்களது அமைப்பை தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வலுப்படுத்த உள்ளோம். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் சொல்வதை செய்யாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக நேற்று முன்தினம் தி.மு.க. அமைப்பு செயலாளர் கல்யாண சுந்தரம், சட்டத்துறை செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் பொலிஸ் அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு மனு ஒன்றை அளித்துள்ளனர். இதுகுறித்து சென்னை மாநகர பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சந்தனநங்கை கிருஷ்ணன் (சந்திரா)

திதி: 03.06.2013



மண்ணில் மலராய்
28.10.1952

விண்ணில் மலராய்
14.06.2012

ஆண்டொன்று ஆனதம்மா
அழியாத உங்கள் நினைவலைகள்
தூண்டும் எங்கள் துயர்க்கடலை
மீண்டும் உங்கள் முகம் காணத்துடிக்கின்றோம்
துயரவடுக்களை எங்கள் இதயத்தில் சுமக்கின்றோம்.

நிலையில்லா வாழ்வென்று தெரிந்திருந்தும்
நித்தியமாய் எங்களோடு வாழ்வீர் என்று
மகிழ்வாக நாம் இருந்தோம் - இன்று
மனம் கலங்கி நிற்கின்றோம்
எங்கு நீ சென்றாய் அம்மா?

உலக நியதிக்குள் உள்ளடங்கி
உண்மை உணர்வு பெற
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

இல. 5/4, றக்கா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3792) (45.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையில் வெற்றி பெறுவோரின் ஒரே தெரிவு புலமை




எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

34

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், தரம் 4, 5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள், மேலும் பல தகவல்களுடன்



புலமை ஆசான் திரு. P. அம்பிகைபாகன் விசேடமாக தயாரித்த பயிற்சிகள் இவ்வாரம் வெளிவருகின்றன.

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



# O/L மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

STEP 08 இதோ! வெளிவந்துவிட்டது உள்ளே...




எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

- தமிழ்
- ஆங்கிலம்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- சிங்களம்
- சித்திரம்
- மாதிரி வினாத்தாள்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 077 23[illegible]

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222


## தாய்லாந்துக்கு நன்றி தெரிவித்த நிமல்

கொழும்பு, ஜூன் 03

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தில் தாய்லாந்து எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகின்றேன் என அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை நாடாளுடன்றத்துக்கு சென்ற தாய்லாந்து பிரதமர் சினவத்ராவை வரவேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு தலைவரொருவர் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின் றேன். இலங்கைக் கும் தாய்லாந்துக் கும் இடையில் சிறந்த நல்லுறவு பேணப்படுகிறது. ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எமது ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார். அபிவிருத்தியில் தாய்லாந்தின் நேரடிப் பங்களிப்பை வரவேற்கிறோம். நாடாளுமன்றத்தில் தாய்லாந்து பிரதமர் உரையாற்றியமை இரு நாட்டு நல்லுறவுக்கு உந்துசக்தியாக அமையும் - என்றார். (ஐ-ரி)

## 14 மாணவர்களை தாக்கியது மின்னல்

மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட 14 மாணவர்கள் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிரிவுல்ல இன்னஹர தவுல வித்தியாலயத்தைச்சேர்ந்த மாணவர்கள் 14 பேரே மின் னல் தாக்கத்திற்கு இலக்காகி இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பெய்தஇடைமழையால்பாடசாலைமீதுமின்னல் தாக்கியுள்ளதால் அந்த மின்னல் தாக்கத்தினால் அதிர்ச்சிய டைந்த நிலையிலேயே இவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, குறித்த மாணவர்களுக்குத் பெரியளவில் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும், அவர்களுக்குத் தேவை யான சிகிச்சைகள் அளிக்கப் பட்டு வருகின்றன என்றும் வைத் தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.


### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1980, நட்சத்திரம்- மூலம், லக்கினத்தில் செவ்வாய், அரச எழுதுவினைஞராக (HNDA) பணிபுரியும் மணமகனுக்கு அரச, வங்கி, ஆசிரிய மணமகள் தேவை. வலிகாமம் பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு- 0779558170 (தந்தை)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடாசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றி 26.01.2012இல் இருந்து அதிபர் சேவை 2II இற்கு பதவி உயர்வு பெற்று, யா/ஞானோதய வித்தியாலயத்தில் இன்று அதிபராகக் கடமையேற்கும்

திருமதி கமலராணி சிவராஜா

அவர்களை தனது சேவைக்காலத்தில் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம் யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.



Reg. No:NAL/DS/1220/181

### Van West Clinic & Nursing Home

Health Is Wealth

வண்.மேற்கு வைத்தியசாலை

*3வது ஆண்டு நிறைவில் 03.06.2013*

**எமது வைத்திய சேவை வழமைபோல்**

- பொது வைத்திய நிபுணர் சேவை
- பொது சத்திரசிகிச்சை நிபுணர்களின் ஆலோசனை
- மகப்பேற்று நிபுணர்களின் ஆலோசனை
- குழந்தை வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
- தோல் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
- கண் வைத்திய நிபுணர் ஆலோசனை
- இருதய வைத்திய நிபுணர் ஆலோசனை

மற்றும் இரவு பகல் சேவை (37917)

வெளி நோயாளர் பிரிவு, உள் நோயாளர் பிரிவு, விடுதி வசதிகள், இரத்தம், சலப் பரிசோதனைகள், ஸ்கானிங் (SCANNING), ஈ.சி.ஜி. (E.C.G.) என்பனவும் நடைபெறுகின்றன வழமைபோல்.

(Dr. GANGADHARAN HOSPITAL) நிர்வாக இயக்குநர்.

#60, Iynkarkovil Street, Vannarpannai, Jaffna. 021 222 1697



### ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இலுப்பை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தோல் இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழி முறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

### ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வரட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்க்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பல்வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிரப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

### சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:

**சிவா நறுமணப் பூங்கா**

இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


(சத்திர சந்திக்கு அருகில்)

தொலைபேசி: 021 222 2567

(சி/7245)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு




இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையால் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு சுகாதார பரிசோதகர் பிரபாகரனால் நடத்தப்பட்டது. வட்டுக்கோட்டை மத்திய மேற்குப் பிரிவுகள் அனுசரணையுடன் வட்டு.மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.கிளைத்தலைவர் கு.பாலகிருஷ்ணன் பிரிவுச் செயலாளர் ஆர்.கனகராசா உட்பட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். (வ-7)

## உழவு இயந்திரம், லாண்ட் மாஸ்ரர் வைத்திருப்போருக்கு அறிவுறுத்தல்

வலி.வடக்கு, ஜூன் 3

உழவு இயந்திரம், லாண்ட் மாஸ்ரர்கள் வைத்திருப்போர் இரவு வேளைகளில் அதனை எவ்வாறு செலுத்த வேண்டும் என சுன்னாகம் பொலிஸாரால் அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன.

விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக சுன்னாகம் பொலிஸார் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் வீதிகளில் உழவு இயந்திரங்கள் மற்றும் லாண்ட் மாஸ்ரர்களை செலுத்துவதாக இருந்தால் உழவு இயந்திரம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பெட்டியிலும் உரிய முறையில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு இருப்பதுடன் பெட்டியின் பின் புறத்திலும் மின்குமிழ் பிரகாசமான முறையில் ஒளிரக் கூடியதாக பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

இதனை தவிர்த்து குறிப்பிட்ட வாகனங்கள் வீதியில் செலுத்தப்படுமாக இருந்தால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-86)

# மூடப்பட்டது ரயில் நிலையப் பாலம்

### மழை காலத்தில் வெள்ள அபாய நிலை; இராமாவில் கந்தசுவாமி ஆலய மக்கள் கவலை

தென்மராட்சி, ஜூன் 3

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நீண்ட காலமாகக் காணப்பட்ட ரயில்நிலைய வீதிப் பாலம் மூடப்பட்டு புனரமைக்கப்படுவதால் அந்தப் பகுதியில் வதியும் மக்கள் மழை காலங்களில் வெள்ள அபாயம் ஏற்படுமெனக் கவலை தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் ரயில் நிலையம் அமைந்துள்ள இடத்திலிருந்து வரும் மழை வெள்ளம் அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள இராமாவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக உள்ள ரயில் வீதி பாலம் மற்றும் ஏ-9 வீதி மதகு ஊடாக நீண்ட காலமாக இருந்துவரும் வாய்க்கால் வழியாக வெளியேறியது.

இராமாவில் நலன்புரி நிலையத்துக்குச் செல்வதற்கு புதிதாக அமைக்கப்பட்ட வீதி காரணமாக வெள்ளம் வழிந்தோடுவது தடுக்கப்பட்ட நிலையிலும் தண்டவாளம் அமைப்பதற்கான ரயில் பாதை செப்பனிடும் பணியில் ஈடுபடுவோர் ஆலயத்துக்கு முன்பாக இருந்த பாலத்தை மூடிவிட்டதாலும் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஏ-9 வீதி அகலிப்பின் போது கொடிகாமம் நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட வடிகால் வெள்ள நீர் வடிந்தோட வசதியாக கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது.



இதேவேளை ஆலயத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் மதகு அமைக்கப்பட்டுள்ள போதிலும் ரயில் பாதைப் பாலம் மூடப்பட்டுள்ளதால் மழை வெள்ளம் வெளியேற முடியாததால் குடியிருப்பு காணிகளுக்குள் வெள்ளம் தேங்கக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-9)

# மும்மொழிகளிலும் வீதி பெயர்ப்பலகை

### பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள்

வடமராட்சி, ஜூன் 3

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள பெயர்ப் பலகைகள் நடும் பணி முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

நகரில் மொத்தமாக உள்ள 92 வீதிகளிலும் முதலாம் கட்டமாக 52 வீதிகளுக்கு அவற்றின் தொடக்கத்திலும் முடிவிலும் பெயர்ப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. எஞ்சிய 40 வீதிகளுக்கும் அடுத்த கட்டமாக வீதிப் பெயர்ப்பலகைகள் நடப்படும் எனப் பருத்தித்துறை நகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.




வீதிப் பெயர்ப் பலகைகள் நடப்படுவதால் நகருக்கு வந்து செல்லும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர்களுக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் வீதிகளை அடையாளம் காண இலகுவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ் லோன் தண்ணீர்க் குழாய் நிறுவனம் வீதிப் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு நகர சபைக்கு அனுசரணை வழங்கியுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர சபைகளின் எல்லைக்குள்ளேயே வீதிப் பெயர்ப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் வீதிப் பெயர்ப் பலகைகள் எவையும் நிறுவப்படவில்லை. (வ 8)

# மூன்றாவது மதுபான நிலையம் நெல்லியடியில் திறந்து வைப்பு

### மக்கள் மத்தியில் அதிர்ச்சி; அதிருப்தி

வடமராட்சி, ஜூன் 3

நெல்லியடி நகரப் பகுதியில், பொதுச் சந்தைக்கு அண்மித்ததாக, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் ஒன்று கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் திறக்கப்பட்டமை குறித்து மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸ் நிலையம், பொதுச் சந்தை மற்றும் தனியார் வங்கிகள் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்த மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டமை நெல்லியடி பிரதேச மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசுவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

''மதுபான விற்பனை நிலையங்களை பிரதேசத்தில் திறப்பதற்கு அனுமதி கொடுப்பது பிரதேச செயலரே தவிர பிரதேச சபை அல்ல. அங்கத்தவர்களாக குறிப்பிட்ட தொகையைக் கொண்ட 'கிளப்பு' களுக்கு மட்டுமே பிரதேச சபை அனுமதி வழங்க முடியும். மதுபான விற்பனை நிலையத்துக்கு அல்ல'' எனத் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

'' இந்த மதுபான விற்பனை நிலையத்துக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு அந்த நிலையம் கொடிகாமம் வீதியில் இயங்கி வந்தது. அது நெல்லியடிச் சந்திக்கு அருகில் அமைந்திருந்தமையால் பின்னோக்கி நகர்த்தும் படி உத்தரவிடப்பட்டது.

அதன் காரணமாக குறிப்பிட்ட மதுபான விற்பனை நிலையம் 6 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்தது.

அனுமதிப் பத்திரம் பெற்ற நிறுவனம் ஒன்றுக்கு இடம் கிடைக்காமையினால் வேறு விதமான சில பிரச்சினைகள் இடம்பெறாமல் தடுப்பதற்கான நோக்கத்தை கருத்தில் கொண்டே குறிப்பிட்ட இடத்தில் மதுபான விற்பனை நிலையம் திறக்க அனுமதிக்கப்பட்டது'' என விளக்கம் தந்தார்.



நெல்லியடி நகரப் பகுதியில் [illegible] துறை வீதி, மத்திய மகா வித்தியாலய வீதி ஆகிய இடங்களில் முறையே ஒவ்வொரு மதுபான விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. தற்போது திறக்கப்பட்ட [illegible] நிலையத் [illegible] மூன்று மதுபான விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்தில் பெருகியுள்ள மதுபான விற்பனை நிலையங்களைக் குறைக்க வேண்டும். புதிதாக மதுபான விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கக் கூடாது என வடமராட்சிப் பிரதேச உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின் போது வற்புறுத்திக் கூறப்படுகின்ற போதிலும் இவற்றைக் கட்டுப்படுத்துவதில் சம்பந்தப்பட்டோர் தவறிவிட்டனர், தவறி வருகின்றனர் என பொது மக்கள் தரப்பில் பலத்த குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றன.

இதேவேளை, வல்வெட்டித்துறை நகரில் இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையம் வல்வெட்டித்துறை நகர சபை எடுத்துக் கொண்ட நடவடிக்கையினால் நகரப் பகுதியில் இருந்து பல மாதங்களுக்கு முன்னர் நீதிமன்ற உத்தரவின்படி அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலர்களுக்கு எதிராக குற்றப் பத்திரம்

## முறைகேடாகப் பணியாற்றியமையே காரணம் என்கிறார் செனவிரத்ன



கொழும்பு,ஜூன் 3
அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐந்து பிரதேச செயலர்களுக்கும், ஆறு கிராம சேவையாளர்களுக்கும் எதிராக குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
இவ்வாறு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.
முறைகேடுகள் இடம்பெறுவதற்கு அனுசரணை வழங்கியுள்ள பிரதேச செயலர்கள் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் கூறினார்.
கடந்த மூன்று மாத காலத்துள் பிரதேச செயலகங்களுக்கு எதிராகப் பொதுமக்களிடமிருந்து 205 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 90 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.
இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக 35 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் 25 முறைப்பாடுகள் தொடர்பான அடிப்படை விசாரணைகள் முடிவுற்றுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

**முறைகேடுகள் இடம்பெறுவதற்கு அனுசரணை வழங்கியுள்ள பிரதேச செயலர்கள் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

## வீசிய சுழல் காற்றால் மட்டக்களப்பில் சேதம்



சுழல் காற்றால் சேதமடைந்த கட்டடங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பார்வையிடுகின்றார்.

மட்டக்களப்பு, ஜூன் 3
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் வீசிய சுழல் காற்றால் 35 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.
மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேசத்தில் 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 4 பொதுக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.
பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
காற்றினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விவரங்கள் தொடர்ந்தும் திரட்டப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் கூறினார். (ச)

## மலேரியாவை தடுக்க திருமலையில் பேரணி



**மலேரியா தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது.**

திருகோணமலை, ஜூன் 3
உலக மலேரியா தினத்தை முன்னிட்டு சர்வோதயமும் திருகோணமலை பிராந்திய மலேரியா தடை இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்த மலேரியா விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது.
இதன்போது திருகோணமலை, 3ஆம் கட்டை சர்வோதய தலைமை அலுவலகத்திலிருந்து திருகோணமலை நகரம் வரை விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.
திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மலேரியா சம்பந்தமான பொது அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.(ச-40)



மட்டக்களப்பு, பட்டிருப்பு தேசிய பாடசாலையில் கல்வி கண்காட்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட பலர் அழைத்துவரப்படுகின்றனர்.

## சம்மாந்துறையில் அதிக விபத்துக்கள்

அம்பாறை, ஜூன் 3
அம்பாறை, சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவிலேயே கூடுதலான வாகன விபத்துக்கள் இடம்பெற்று வருவகின்றன என்று சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த தஹநாயக்க தெரிவித்தார்.
2012 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் வீதி விபத்துக்களில் சிக்கி 64 பேர் உயிரிழந்துள்ளனர்.
இவற்றில் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவில் மாத்திரம் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இதே வேளை கடந்த 2007 முதல் 2012 வரையான ஆறு ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் 42,088 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று அவர் கூறினார். (ச)

## தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூன் 3
அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கான விழிப்பூட்டல் செயலமர்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
இந்தச் செயலமர்வில் வாக்காளர் வருடாந்த பதிவுகள் மற்றும் வாக்காளர் பதிவுகள் மேற்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகளை



தீர்த்துவைத்தல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.
அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திலின விக்ரமரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில், பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் உட்பட பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## வடமாகாண சபை தேர்தலை ஜனநாயக ரீதியாக நடத்துங்கள்

### அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்

அம்பாறை, ஜூன் 3
ஜனநாயகரீதியாகத் தேர்தல் நடத்தப்பட்டு, வடமாகாண சபை நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.
இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
வடமாகாண சபைக்கான தேர்தல் குறித்த உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் வெளியாகியுள்ள இந்த நிலையில், தேர்தல் நடைபெறுமா? நடைபெறமாட்டாதா? என்று ஐயப்பாடும் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தக் கூடாது என்று இனவாத சக்திகள் கூக்குரலிட்டும் வருகின்றனர்.
இத்தகைய செயற்பாடுகள் வட பகுதி மக்களின் ஜனநாயக உரிமையைக் குழி தோண்டிப் புதைக்க முற்படுவதாகவே கருத வேண்டியுள்ளது.
அதிகாரத்தைப் பரவலாக்கும் நோக்கில் வடக்கு, கிழக்கை முக்கிய இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலமான மாகாண சபைகள் [illegible] வடக்கு மக்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பு இது வரை வழங்கப்படவில்லை.
வடக்கு மக்களுக்கான இந்த ஜனநாயக உரிமை மறுப்பு இன்னும் தொடர்கதையாக இருந்து வருவதற்கு இடமளிக்கக் கூடாது.
எனவே நாட்டில் அமைதியைக் குலைக்க முற்படும் இனவாத சக்திகளின் கூச்சல்களுக்கு செவி சாய்க்காது வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பீடிப்பு 20 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 3
கொழும்பில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டிருப்போரின் எண்ணிக்கை 20 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று கொழும்பு நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.
கடந்த ஐந்து மாதங்களில் கொழும்பில் டெங்கால் பாதிக்கப்பட்டு ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன் 1200 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களில் 55 வீதமானோர் மாணவர்கள் என்று அவர் கூறினார்.
டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்



போது டெங்கு நுளம்பு பரவுவதற்கான சுற்று சூழலை வைத்திருக்கின்ற 51 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவ்வாறான பாடசாலைகளுக்கு இறுதி எச்சரிக்கை கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# புகைபிடித்தல் 15 வீதம் வீழ்ச்சி

## வருடாந்தம் 25,000 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன்3
இலங்கையில் புகைபிடித்தல் வருடா வருடம் 15 வீதமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது என்று மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர தெரிவித்தார்.
இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியை 2012 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது புகைப்பிடித்தலில் சுமார் 14 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
புகைபிடித்தல், புகையிலைப் பாவனை தற்போதைய வேகத்தில் வீழ்ச்சி அடைந்து செல்லுமாயின் அது 2020 ஆம்



ஆண்டாகும் போது 2 வீதமாக வீழ்ச்சி அடைந்து விடும் என்று அவர் குறிப்பிட்டார்.
புகை பிடித்தலால் ஏற்படும் நோய்களால் வருடா வருடம் இலங்கையில் மாத்திரம் 25,000 பேர் உயிரிழக்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினர். (ச)



சீன உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால்ஒப்பந்தங்கள் பல கைச்சாத்திடப்பட்டன. அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சீன அரசுடனான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதைக் காணலாம்.

# அடிபணிந்ததில்லை இனவாதத்துக்கு

## ‘வீதிகளில் இறங்கி கொலை செய்’ என்று பௌத்தத்தில் கூறவில்லை என்கிறார் ராஜித

கொழும்பு,ஜூன் 3
எனது அரசியல் வாழ்க்கையில் இனவாத மற்றும் மதவாதத்துக்கு ஒரு போதும் அடிபணிந்ததில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.
பேருவளை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறிய தாவது:-
எந்த இனவாதக்கட்சிகள் வந்தாலும் எம்மைப் போன்ற மனிதர்களைக் கீழே தள்ள முடியாது. கௌதம புத்தரின் தத்துவங் களில் எந்த இடத்திலும் சிங்கள பௌத்தம் பற்றி வலியுறுத்திய தில்லை.



கௌதம புத்தர் சாதி என்பது எதுவென்பதனை தெளிவாக விளக்கியுள்ளார். உண்மையில் சாதி என்பது மனித சாதியையே குறிக்கும் என்று கௌதம புத்தர் வரைவிலக் கணப்படுத்தியுள்ளார்.
பௌத்த தர்மத்தில் எந்தவொரு இடத்திலும் பிக்குகள் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத் தப்படவில்லை. பொலி ஸாருடன் அடித்துக் கொள்ளு மாறு எந்த இடத்திலும் குறிப் படப்பட வில்லை.
வீதிகளில் இறங்கி கொலை செய் என்று பௌத்த தர்மத்தில் குறிப்பிடப்படவில்லை. உலகின் பல நாடுகளில் மதங்களுக்கு இடையில் வாதங்கள் நடைபெற்றன. எனினும், அவை கை , கால் களைப் பயன்படுத்தி நடத்தப்படவில்லை. அவை புத்தியூடாக நடத்தப்பட்டன. -என்றார். (ச)

# கொம்பனித்தெரு கொள்ளை; சந்தேக நபர்களுக்கு மறியல்

கொழும்பு,ஜூன் 3
கொழும்பு, கொம்பனித் தெருவில் வர்த்தகர் கடத்திச் செல்லப்பட்டு நூறு லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு சந்தேகநபர்கள் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர், நான்கு பொலிஸ்




உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட எட்டு சந்தேகநபர்களை கைது செய்து அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தினர்.
எவ்வாறாயினும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் மற்றுமொரு சந்தேகநபரையும் இதன்போது அடையாளம் காண முடியாமற் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அடையாள அணிவகுப்பையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வர் உள்ளிட்ட எட்டு சந்தேகநபர்களையும் அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.
இதன்போது இரண்டு சாட்சியாளர்களால் இரண்டு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ச)

# சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு நியாயமானதாக இருக்க வேண்டும்

## சீனாவில் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,ஜூன் 3
சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைவருக்கும் சமனானதாக இருக்க வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
அந்தத் தீர்மானங்கள் நியாயமானதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.
சீனாவின் ஷெங் மாநிலத்தில் வியாழக்கிழமை ஆரம்பமான ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் விசேட அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தற்போதைய சுற்றாடல் பிரச்சினை நாடுகளின் அதிகரித்த தொழினுட்ப பாவனையால் ஏற்பட்டது என்று அவர் கூறினார். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இதனைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ச)

# மத்தல விமான நிலையத்துக்கு மின்சாரவேலி அமைக்க திட்டம்



கொழும்பு, ஜூன் 3
மத்தல சர்வதேச விமான நிலைய சுற்றாடலுக்குள் காட்டு யானைகள் உட்புகுவதைத் தடுப்பதற்கு ஏதுவாக 76 கிலோ மீற்றர்கள் நீளமான மின்சார வேலியை அமைப்ப தற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலர் ஆர். சி.டி.சொய்சா தெரிவித்துள்ளார்.
இந்த விமான நிலையத்திலிருந்து 10 கிலோ மீற்றர்கள் தொலைவில் லுணுகம் வெஹெர தேசியவனமும், மறுபுறத் தில் 20 கிலோமீற்றர்கள் வரையிலான தொலைவில் உடவளவை தேசிய வனமும் அமைந்துள்ளது.
இந்த தேசிய வனங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளையும் கடந்து சில யானைகள் விமான நிலைய சுற்றாடலுக்குள் வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.
புதிதாக அமைக்கப்படவுள்ள மின்சார வேலிக்கு மேலதிகமாக காட்டு யானைகளின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்கு வேறு செயற்றிட்டமும் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

# டிப்ளோமாதாரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம்

## அமைச்சரவையிடம் அனுமதி கோரப்படும் என்கிறார் பந்துல



கொழும்பு, ஜூன் 3
ஆங்கில பட்டதாரிகளுக்கும், ஆங்கில டிப்ளோமா தாரிகளுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
இதற்கான அனுமதி அமைச்சரவையிலிருந்து பெறப்படவுள்ளது என்று அவர் கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
ஆங்கில பட்டதாரிகள் இல்லாத காரணத்தால் ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆங்கில ஆசிரியர் நியமனத்துக்கு சேர்த்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவையின் ஊடாக பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எமது நாட்டவர்கள் சுமார் 16 லட்சம் பேர் வெளிநாட்டு செலாவணியை ஈட்டித் தருகின்றனர்.
எமது நாட்டுக்கு மேலும் வெளிநாட்டு செலாவணியை பெற வேண்டுமாயின் ஆங்கில மொழி அறிவு மட்டுமல்ல வெளி நாட்டு வேற்று மொழிகளையும் கற்றிருத்தல் அவசியம்.
அரசின் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மொழிப் பிரிவுகளும் உருவாக்கப்படவுள்ளன.
ஒழுங்கான முறையில் கல்வித் திட்டம் அமையாத காரணத்தினால் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இனிவரும் காலங்களில் இந்த நிலை தோன்றாத வகையில் கல்வியில் திருப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை கட்டடம், சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா கொமினிகேசன்ஸ்' மாலுசந்தி, அல்வாய்: 021 226 3206. 'நெல்லியடி [illegible]' [illegible] நிலையம், நெல்லியடி: 021 490 1519. [illegible] மன்னார்: 023 222 2052 'சீமெலை கஜானன' கண்டி வீதி, கீழலை தெற்கு: 021 227 0399. 'மன்னார் [illegible]' [illegible] வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் [illegible]' [illegible] நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி [illegible]' முல்லைத்தீவு நகர்: 0779598917. 'அன்பரசன்' [illegible], ஒட்டுசுட்டான்: 0775035571.

## கசப்பும் இனிப்பும்

''மாகாணசபைத் தேர்தலை அரசு நடத்துமானால் எங்களின் பதவிகளை துறந்துவிடுவோம்'' இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்கள் மூத்த அமைச்சர்கள் சிலர். இவர்களும் அரசின் ஓர் அங்கம்தான். அப்படியிருந்தும் சபை தமது விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதி வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் விடாப்பிடியாக நிற்பதால்தான் இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்ட பின்னரே வடமாகாணத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே பதவி விலகல் மிரட்டல் விடுத்துள்ள அமைச்சர்களின் கோரிக்கை.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படியே மாகாண சபை முறைமை இலங்கையில் கொண்டுவரப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாகவே இந்த மாகாண சபை முறைமை இந்தியாவால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால் எந்த மக்களுக்காக மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டதோ அந்த மக்கள் அதன்மூலம் கிடைத்த பயனை இதுவரை அனுபவிக்கவே இல்லை. மாறாக ஏனைய மாகாணங்களே இந்தப் புதிய நடைமுறை மூலம் தம்மை வளப்படுத்திக்கொண்டன.

அப்போதெல்லாம் மாகாண சபைகளுக்கிருந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க வேண்டும் என்று எவருமே குரல்கொடுத்திருக்கவில்லை. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது கூட இந்தக் கோரிக்கைகள் எழுந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வடக்குத் தேர்தல் என்றவுடன் மட்டும் ''13ஆவது திருத்தத்தால் உருவான மாகாண சபைத் தேர்தல் நடத்துவது தமிழர்களுக்கு தனிநாடு கொடுத்ததற்கு ஒப்பானதாகும்'' என்று வரிந்து கட்டிக் கொண்டு பேரின அரசியல்வாதிகள் களமிறங்கி விட்டார்கள்.

தாம் அனுபவிக்கும்போது மட்டும் மாகாண சபை முறைமை இனிப்பாக அவர்களுக்கு இருந்தது. ஆனால் வடக்கிற்கு வரும்போது மட்டும் அந்த முறைமை அவர்களுக்கு கசக்கிறது. காரணம் இல்லாமல் இல்லை. கிழக்கு உட்பட ஏனைய மாகாணங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்ட போது அரச தரப்பு அல்லது வேறு ஏதும் பேரினக் கட்சிகளோ தான் ஆட்சியைப் பிடிக்கக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால் வடக்கில் அப்படியல்ல. தேர்தல் என்று அறிவித்தவுடனேயே வந்திறங்கிய அரச பிரதிநிதிகள் ''வடக்கில் கூட்டமைப்பே வெல்லும்'' என்று உண்மையை வெளிப்படையாக ஒத்துக் கொள்ளும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. என்னதான் தலைகீழாக அரசதரப்பு நின்றாலும், இலவசங்களை அள்ளி வீசினாலும், அபிவிருத்தி, வேலை வாய்ப்புப் போன்ற கனவுகளை எலும்புத் துண்டுகளாக வீசி எறிந்தாலும் கடைசியில் தமிழ் மக்கள் வாக்களிக்கப் போவதென்னவோ கூட்டமைப்புக்குத்தான். இதனை அரசு மட்டுமல்லாது தென்னிலங்கை முழுவதுமே உணர்ந்துள்ளது. அதனால்தான் தமிழர்களின் கரங்களுக்கு ஒரு மாகாண சபை போவதா என்று வீம்புடன் அதனைத் தடுத்து நிறுத்தும் கைங்கரியங்கள் தொடங்கி விட்டன. ஒருபுறம் தேர்தலை நடத்துவதாக அறிவித்த அதே அரசுதான், தேர்தலை நடத்தினால் பதவி துறப்போம் என்று மிரட்டலில் ஈடுபடும் அமைச்சர்களை ஊக்குவித்து வருகிறது. பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும் அரசு மனதார தமிழர்களுக்குத் தீர்வைத் தர முன்வராது. அதனையே அமைச்சர்களின் எதிர்ப்பும் வெளிப்படுத்தி நிற்கிறது.

# ஒளித்து விளையாடும் மஹிந்தவின் சாணக்கியம்

*உப்புல் ஜோசப் பெர்னாண்டோ*
*தமிழில் வி.எஸ்.ரி*

''இத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலும், சவால்கள் எவற்றுக்கும் முகம்கொடுக்க நேராதவிதத்தில் தாம் ஜனாதிபதிப் பதவியை எவ்வாறு கைப்பற்றிக் கொள்வது என்பதிலேயே மஹிந்த ராஜபக்ஷ குறியாக இருக்கிறார்'' என விமல் வீரவன்ச விமர்சித்துள்ளதாக 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் திகதி வெளியான லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அதேவேளை, ''சுனாமி பொதுக் கட்டமைப்பு குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஒப்புதல் அளித்தள்ள போதிலும், நாட்டின் பிரதமர் என்ற வகையில் மஹிந்த எந்தவித கருத்தும் வெளியிடாது மௌனம் காத்து வருகிறார். சுனாமி பொது கட்டமைப்பு உடன்பாடு நல்லதா? கெட்டதா? என்பது குறித்து கருத்து வெளியிடும் துணிச்சல் பிரதமருக்கு இல்லையா? இந்த உடன்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி.யினர் அரசிலிருந்து வெளியேறி விட்டனர். இந்த நிலையில் பிரதமர் மஹிந்த அது குறித்து மௌனம் சாதிப்பதேன் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் நியமனத்தைப் பெற்று இனவாதத் தரப்புக்களான ஜே.வி.பி, ஹெல உறுமய மற்றும் சுதந்திரக் கட்சியிலுள்ள கடும் இனவாதத் தரப்பினரின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதிப் பதவியை அடையும் நோக்கிலேயே மஹிந்த, சுனாமி பொதுக் கட்டமைப்புக் குறித்து கருத்தேதும் வெளியிடாது மௌனம் காக்கிறார். நாட்டின் முக்கிய பிரச்சினையொன்றில் .குருடனைப் போன்றும், செவிட்டு ஊமையைப் போன்றும் நடந்து கொள்ளும் தலைவரல்லாது .நேரடியாகக் கருத்து வெளியிட்டு முடிவெடுக்கவல்ல தலைவரொருவரே இந்த நாட்டுக்குத் தேவை என்பதை நாட்டு மக்கள் நன்குணர்ந்துள்ளனர்'' என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன விமர்சித்துள்ளதாக 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதிய 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

உண்மையில் சுனாமி பொதுக்கட்டமைப்புக் குறித்து மட்டுமன்றி, இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாகவும் மஹிந்த ராஜபக்ஷவின் போக்கு ஒழித்து விளையாடும் போக்கை ஒத்ததொன்றே. அவரது அரசியலின் யதார்த்தமே ஒழித்து விளையாடும் தன்மை கொண்டதே. 1992 ஆம் ஆண்டில் சந்திரிகா சுதந்திரக் கட்சி கட்சியில் இணைந்து, நாட்டின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்ற கருத்து நிலைப்பாட்டை சுதந்திரக்கட்சிக்குள் உருவாக்கிய வேளை, மஹிந்தவோ போர் ஒன்றின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண இயலுமென்ற கருத்து நிலைப்பாட்டில் செயற்பட்ட ஜாதிக ஹெல உறுமய தரப்பினருக்கு ஆதரவாகக் கருத்து வெளிப்படுத்தி வந்தார். அது உண்மையில் ஜாதிகஹெல உறுமய தரப்பின் நிலைப்பாட்டுக்கான ஆதரவல்ல. உண்மையில் ஜாதிக ஹெல உறுமயவின் கருத்து நிலைப்பாடு பலமடையுமானால் சந்திரிகாவை நலிவுபடுத்தி அனுர பண்டாரநாயக்காவை முன்னிலைக்குக் கொண்டுவந்து அதன் மூலம் சுதந்திரக் கட்சியின் இரண்டாவது நிலையைத் தான் கைப்பற்றும் நோக்கிலமைந்ததே மஹிந்தவின் அந்த வேளைய திட்டம். அந்த வேளையில் ஜாதிக ஹெல உறுமய தரப்பில் முன்னிலை வகித்துச் செயற்பட்ட திலக் கருணாரத்ன .ஜினதாச நியதபால.ஹேமகுமார நாணயக்கார போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திரிகாவுக்கு எதிரான அனுர பண்டாரநாயக்காவுக்கு ஆதரவான போக்கைக் கொண்டிருந்தவர்கள் ஆவர்.

1994 ஆம் ஆண்டில் சந்திரிகா பதவிக்கு வந்ததும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தீர்வுப் பொதியொன்றைச் சமர்ப்பித்த வேளை, மஹிந்த சுதந்திரக் கட்சிக்குள்ளும் வெளியிலும் சிங்கள பௌத்த தீவிரத் தரப்புக்குத் தலைமை தாங்கும் நோக்கம் கொண்டிருந்தார். அரசில் அங்கம் வகித்தவாறே சிங்கள பௌத்த தீவிரத் தரப்புக்குத் தலைமை தாங்கி சந்திரிகாவின் தீர்வுப்பொதி யோசனையை எதிர்த்ததாலேயே மஹிந்தவுக்கு அந்த வேளை மகாநாயக்க தேரர்கள் ஸ்ரீ ரோகன ஜன ரஞ்சன என்ற கௌரவப்பட்டம் வழங்கிப் பாராட்டினர். ஆனாலும் 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா தனது தீர்வுப்பொதித் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது மஹிந்த திரிசங்கு சொர்க்க நிலைக்கு உள்ளானார். மகாநாயக்க தேரர்களும், சிங்கள பௌத்த தீவிரத் தரப்புக்களும் சந்திரிகாவின் தீர்வுப் பொதித் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுத்த வேளை, மஹிந்த அதனைத் தவிர்த்து தங்காலைக்குச் சென்றமை, தாம் அவ்விதம் தீர்வுப் பொதிக்கு எதிராக வாக்களித்தால் தமது அரசியல் எதிர்காலம் அத்துடன் அஸ்தமனம் ஆகிவிடும் என்பதை நன்குணர்ந்தமையாலேயே ஆகும். ஆயினும் மஹிந்தவின் அதிஷ்டமோ என்னமோ, சந்திரிகாவின் தீர்வுப் பொதித் திட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டது. இல்லையேல் சிங்கள பௌத்த தீவிரத் தரப்போ, அல்லது சுதந்திரக் கட்சியோ இரண்டில் ஒரு தரப்பு மஹிந்தவின் அரசியல் எதிர்காலத்தை மழுங்கடித்திருக்கக்கூடும். 2002 ஆம் ஆண்டில் ரணிலின் தலைமையிலான அரசு, போர் நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டதையடுத்தே இனப் பிரச்சினைத் தீர்வு விடயம் அரங்குக்கு வந்தது. மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஈட்ட ஐ.தே.க அரசு உதவியதால் மஹிந்த ரணிலின் போர் நிறுத்த உடன்படிக்கை குறித்து கடும் எதிர்ப்பெதனையும் காட்டவில்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கைச் செலவு உயர்ச்சி, தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டம் என்பவற்றைக் கையிலெடுத்து அரசை விமர்சித்து வந்தார். ஆனால் அதேவேளை, சுதந்திரக்கட்சியின் ஒரு தரப்பு ஜே வி.பி யுடன் இணைந்து போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராக சிங்கள மக்களை உசுப்பேத்தி வந்தது. ஆனால் மஹிந்தவோ அந்த அணியில் இணைத்துக் கொள்ளாது சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து வாழ்க்கைச் செலவு உயர்வு, தனியார் மயமாக்கல் திட்டம் என்பவற்றை முன்னிறுத்திச் சிங்கள மக்களது ஆதரவைத் திரட்டி வந்தார். 2003 ஆம் ஆண்டில் சந்திரிகா, ரணிலின் ஐ.தே.கட்சி அரசின் வசமிருந்த மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதியென்ற ரீதியில் தம்வசம் எடுத்துக்கொண்டதையடுத்து மஹிந்த, சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய தரப்புக்கள் உருவாக்கிய போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிரான மக்கள் பலத்தை தம்வசம் எடுத்துக்கொண்டமை சந்திரிகா புதிதாக அமைக்கப்போகும் அரசில் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலாகும்.

> மஹிந்த ஜனாதிபதிப் பதவியை ஈட்டிக் கொண்ட பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு அவர் மீது வீழ்ந்தது.

2005 ஆம் ஆண்டில் சந்திரிகா சுனாமி நிவாரண கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டதால் ஜே.வி.பி. தரப்பு அரசிலிருந்து வெளியேறிய வேளையில் 2000 ஆம் ஆண்டிலிருந்து தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டபோது முகம்கொடுக்க நேர்ந்ததைப் போன்ற சிரமத்துக்கு மஹிந்த மீண்டும் முகம் கொடுக்க நேர்ந்தது. ஒரு புறம் ஜே.வி.பியும் மறுபுறம் ஜாதிகஹெல உறுமயவும் சிங்கள பௌத்த அதிகாரத்தை முன்னிறுத்தி சுனாமி நிவாரணக் கட்டமைப்புக்கு எதிராக அரசிலிருந்து வெளியேறி வருமாறு மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுத்தபோது, சுதந்திரக் கட்சியின் அங்கத்துவத்தையும் பிரதமர் பதவியை காப்பாற்றிக் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகும் சவாலின் முன்னால் மஹிந்த கையறு நிலைக்கு உள்ளானார். அது மட்டுமன்றி, சந்திரிகாவின் வற்புறுத்தல் காரணமாக பிரதமர் என்ற ரீதியில் சுனாமி நிவாரண கட்டமைப்பு சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டது. இதனால் சுனாமி நிவாரணக் கட்டமைப்புக்கு எதிரான சிங்கள பௌத்த தீவிர சக்திக்கு முன்னால் மஹிந்தவின் பிரதிவிம்பம் சிதைந்து போகும் நிலை உருவானது. அந்த வேளையில் மஹிந்தவை அந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றியவர் முன்னாள் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வாவே. அவர் சுனாமி நிவாரணக் கட்டமைப்பு சட்டவிரோதமானதொன்றெனத் தீர்ப்பு வழங்கியதன் மூலம் அந்தக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பிலிருந்து மஹிந்தவை விடுவித்து உதவினார். அந்த நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் சந்திரிகாவின் பிரபல்யம் வீழ்ச்சி காண, பொதுமக்கள் எழுச்சியின் மூலம் தலை நிமிர்த்திய ரணிலை தோற்கடிக்க ஜே.வி.பி. ஜாதிக ஹெலஉறுமய மற்றும் சரத் என் சில்வா போன்ற சிங்கள பௌத்த தீவிர தரப்புக்கள் மஹிந்தவின் பின்னால் ஒன்றுதிரண்டன. மஹிந்த சுனாமி நிவாரண கட்டமைப்பை இல்லாதொழிக்கும் ஒப்பந்தங்களை ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய தரப்புக்களுடன் தனித்தனியாக மேற்கொண்டார். இனப்பிரச்சினை விடயத்தில் ஒளித்து விளையாடும் போக்கை மேற்கொண்டு மஹிந்த ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக்கொண்டமை இந்த விதத்திலேயே ஆகும். ஆனால் மஹிந்த ஜனாதிபதிப் பதவியை ஈட்டிக் கொண்ட பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு அவர் மீது வீழ்ந்தது. அதையும் தமது ஒளித்து விளையாடும் அதே உத்தியைக் கையாண்டு பிரபாகரன் இருக்கும் வரை தீர்வு முயற்சி எதுவும் பலன் தரப்போவதில்லை எனக்கூறி மஹிந்த காலத்தை இழுத்தடித்து வந்தார். ஆனால் தற்போது பொறுப்பு மஹிந்தவின் கழுத்தை இறுக்க ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதிப் பதவியை ஈட்டும் வரை இந்தப் பிரச்சினை தொடர்பாக பஹிந்தவின் ஒளித்துப் பிடித்து விளையாடும் போக்கை விட்டுப்பிடித்த சிங்கள பௌத்த தீவிர தரப்புக்கள் தற்போது ஒளித்து விளையாடியது போதும், இப்போது வெளியே வந்து எங்கள் தாளத்துக்கு ஆடுங்கள் என்று மஹிந்தவை கழுத்துப்பிடியாக பிடிக்க ஆரம்பித்துள்ளன. ஜாதிகஹெலஉறுமய , மாகாணசபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் சட்டவிதியை அரசமைப்பிலிருந்து நீக்கி விடுமாறு திருத்தம் கொண்டு வர முயல்வதும் இதன் காரணமாகவே. மஹிந்த இதுவரை என்னதான் ஒளித்துப்பிடித்து விளையாடும் போக்கைக் கைக்கொண்டாலும் இந்தத் தடவை மஹிந்தவின் ஒளித்துப்பிடித்து விளையாடும் போக்கின் இரகசியம் வெளிப்பட்டே தீரும் என்பது நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை இந்தியா மீளப்பெறுவது சாத்தியமா...?

இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையை அந்த நாட்டின் உள்நாட்டுச் சட்டம் கட்டுப்படுத்த முடியாது என 1969இல் உருவாக்கப்பட்ட வியன்னா சாசனத்தின் 27வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1974ஆம் மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கும் மற்றும் அதன் அயல்நாடான இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மூலம் இலங்கைக்கு இந்தியாவால் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்ட கச்சதீவை இந்திய மத்திய அரசு மீண்டும் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எம்.கருணாநிதி உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் இதற்கு முன்னர் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா உச்சநீதிமன்றில் தாக்கல் செய்த மனுவானது இன்னமும் விசாரிக்கப்படாது நிலுவையில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதே. இங்கு இரு முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

முதலாவது, இதற்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் பயனற்றவை என்பதால், கச்சதீவு இந்தியாவுக்கு மீண்டும் கிடைக்கவேண்டும் எனக் கோரிப் போடப்பட்ட வழக்கு பயனற்றது எனக் கூறலாம்.

இரண்டாவது, நாடுகளுக்கிடையில் எல்லைப் பிரச்சினையைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அனைத்துலகச் சட்டத்தின்படி கச்சதீவு தொடர்பான வழக்கும் தொடர்ந்தும் நிலுவையிலேயே இருக்கும். ஏனெனில் இது தொடர்பான வழக்கின் தீர்வானது அயல் நாடுகளான இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எல்லைப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பதால் இது தொடர்பான வழக்கு விசாரிக்கப்படமாட்டாது.

இந்தியச் சட்டத்தின்படி அரசியல் யாப்பின் சரத்துக்கமைய இந்திய தேசத்திற்குச் சொந்தமான கச்சதீவு மீளவும் இலங்கையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என மனுதாரர்கள் கோரியுள்ளனர். இந்திய அரசியல் யாப்பின் சரத்து 1(2)இல் இந்தியாவின் எல்லை தொடர்பாக தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது உள்ளீட்டின் ஏழாவது வரைபில், தமிழ்நாட்டு மாநிலத்திற்குச் சொந்தமான எல்லைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை இந்திய உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியிருந்தது. இந்தியாவுக்குச் சொந்தமான பிரதேசத்தை வெளிநாடொன்றுக்கு இந்தியா வழங்க விரும்பினால், இந்திய நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவுடன் இந்தியச் சட்டத்துக்கு அப்பால் உடன்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

1974ஆம் மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையேயான எல்லை வரையறைக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கச்சதீவானது இலங்கைக்குச் சொந்தமானது என உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் இந்த உடன்படிக்கைகள் எந்தவொரு அரசியல் யாப்பின் பிரகாரமோ அல்லது நாடாளுமன்றின் ஆதரவுடனோ மேற்கொள்ளப்படவில்லை. இந்திய அரசியல் யாப்பின் முதலாவது உள்ளீட்டின் ஏழாவது வரைபின் பிரகாரம், கச்சதீவானது தமிழ்நாட்டின் ஒரு பகுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, இந்திய உச்சநீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

கச்சதீவானது தமிழ்நாட்டின் ஒரு பகுதி எனவும் அது இலங்கைக்கு சட்டபீதியற்ற வகையில் வழங்கப்பட்டதை உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தினாலும் கூட, இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையை இந்திய மத்திய அரசு எடுக்காது. இலங்கையானது இறைமையுள்ள நாடு என்ற வகையில் அதற்கு எதிராக இந்திய நீதிமன்றில் தீர்வெதனையும் முன்வைக்க முடியாது.

இருப்பினும், வரலாற்று ரீதியாக சட்டரீதியற்ற வகையில் இடம்பெற்ற கச்சதீவு கையளிப்பு தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றானது பிரகடனம் ஒன்றை மேற்கொள்ள முடியும். இந்திய உச்ச நீதிமன்றம் இவ்வாறான பிரகடனம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் கச்சதீவை மீளவும் மத்திய அரசு உடைமையாக்கிக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்த முடியுமா?

இந்தியச் சட்டத்தின்படி, கச்சதீவை இந்திய மத்திய அரசு மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என நீதிமன்றம் ஆணை பிறப்பிப்பதற்கு அரசியல் யாப்பின் வரையறைகள் இல்லாதிருக்கலாம். ஆனால் இரு நாட்டு உடன்பாடுகளுமின்றி பிறிதொரு இறையாண்மை நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலத்தை மற்றைய நாடு ஆளமுடியாது. அந்த வகையில், இலங்கைத் தீவின் அனுமதியின்றி இந்தியாவானது கச்சதீவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடியாது. இதில் நீதிமன்றம் தலையீடு செய்து தனது ஆணையைப் பிறப்பித்தால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது அதன் நீதித்துறையால் ஆதிக்கம் செய்யப்படுவதாக கருதப்படும். இதனால் கச்சதீவை இந்தியா மீளவும் தனது உடைமையாக்கிக் கொள்வதற்கு இதன் உச்ச நீதிமன்றம் கட்டளையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.




1974 மற்றும் 1976களில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் இணைந்து கையெழுத்திடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பெறுபேறாகவே கச்சதீவு இலங்கைக்கு கைமாற்றப்பட்டது என்பதை நாம் அறிவோம். இதில் இரு நாடுகளும் உடன்பட்டுள்ளன என்பதால் அனைத்துலகச் சட்ட ஒழுங்கின்படி, இரு நாடுகளின் சம்மதத்துடன் இந்த விவகாரம் தீர்க்கப்பட வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும், கச்சதீவு கைமாற்றம் தொடர்பான உடன்படிக்கைகளின் பிரதிகளில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பிரதிகளை மட்டுமே பெறமுடிகிறது. இந்த உடன்படிக்கைகளில் 'இரு நாட்டு உடன்பாடுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கச்சதீவை இந்திய மத்திய அரசு திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தமிழ்நாட்டு சட்டசபையில் தீர்மானம் இயற்றப்பட்ட போது, இந்திய மத்திய அரசு இலங்கையின் இறைமையை வலியுறுத்தி சில அறிக்கைகளை வெளியிட்டிருந்த போதிலும், இந்த விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசு இன்னமும் உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதனையும் வெளியிடவில்லை.

இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையை அந்த நாட்டின் உள்நாட்டுச் சட்டம் கட்டுப்படுத்த முடியாது என 1969இல் உருவாக்கப்பட்ட வியன்னா சாசனத்தின் 27வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டார் மற்றும் பஹ்ரெய்ன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட கடல்சார் மறுசீரமைப்பு மற்றும் பிராந்திய வரையறை தொடர்பில் எழுப்பப்பட்ட விவாதத்தின் போது, இரு நாடுகளின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றை உள்நாட்டுச் சட்டத்தால் மாற்ற முடியாது என அனைத்துலக நீதிமன்றம் அறிவித்திருந்தது. இது கச்சதீவு விவகாரத்திற்கும் பொருத்தமாக உள்ளது.

இலங்கையும் இந்தியாவும் 1974 இல் கச்சதீவு தொடர்பான உடன்பாட்டை மேற்கொள்வதற்கு முன்னர் இரு நாடுகளும் இந்தத் தீவின் இறையாண்மை தமக்கே உரியது என உரிமை கொண்டாடின. ஆனால் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு கச்சதீவு இலங்கைக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட பின்னர் இன்றுவரை இந்தியாவானது இத்தீவைக் கட்டுப்படுத்துவதில்லை. இலங்கையே இதனைப் பராமரித்து வருகிறது. இந்நிலையில் உடன்பாட்டை மேற்கொண்ட இரு நாடுகளில் ஒன்றான இந்தியா மற்றைய நாடான இலங்கையின் நலன் கருதி கச்சதீவை விட்டுக் கொடுத்துள்ளதுடன், இது தொடர்பில் எதிர்ப்பு எதனையும் காண்பிக்காது அமைதி காத்து வருகின்றது. இரு நாடுகளும் கச்சதீவுக்காக முரண்பட்டால் பிராந்திய ஒருமைப்பாடு சிதைவடையும்.

இந்தியச் சட்டம் மற்றும் அனைத்துலகச் சட்டம் இரண்டையும் எடுத்து நோக்கில், கச்சதீவை இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான சாத்தியப்பாடான நியாயங்கள் எதுவும் காணப்படவில்லை. இந்நிலையில், இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்துவதை முன்னுரிமைப்படுத்தி, தற்போது தமிழ்நாடானது இந்தியா, கச்சதீவை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என மனுத்தாக்கல் செய்துள்ளதானது ஆராயப்பட வேண்டிய தொன்று. இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படுவதாக தமிழ்நாடு அறிவித்துள்ள நிலையில், இந்திய மத்திய அரசானது மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்றுத் தீர்வை முன்வைக்க வேண்டும். ★

*(நன்றி: த ஹிந்து)*

# உன் தகுதியை நீயே உரக்கச் சொல்

சட்ட திட்டங்களில் நிபுணத்துவம் பெறுவதற்காக, கிரேக்க நாட்டுக்கு கடல் வழிப் பயணமானார் 25 வயது இளைஞரான ஜுலியஸ் சீஸர். எதிர்பாராதவிதமாக கப்பலில் இருந்த அனைவரும் கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டார்கள். ''20 தங்கக் காசுகள் கொடுத்தால், உங்கள் நண்பரை விடுதலை செய்கிறோம்' என ஒவ்வொருவரின் நாட்டுக்கும் தனித்தனியாகத் தகவல் அனுப்பினார்கள். உடனே சீஸர் கோபமாக..

''என் விலை 20 தங்கக் காசுகள் தானா?! என்னைக் கேவலப்படுத்தாதீர்கள். 50 தங்கக் காசுகளாவது கேளுங்கள்'' என்றார்.

கொள்ளையர்கள் அலட்சியமாகச் சிரிக்க, ''சிரிக்காதீர்கள். உங்கள் அனைவரையும் கழுத்தை அறுத்துக் கொன்றுவிட என்னால் முடியும்'' என்றார். கொள்ளையர்கள் மேலும் சிரித்தார்கள். சக பயணி ஒருவர், ''எதற்காக இப்படி உன்னை நீயே உயர்வாகப் பேசிக் கொள்கிறாய்! அது உனக்கே ஆபத்தாக முடியலாம்'' என்று எச்சரிக்க, ''நான் யார் என்பதை நான்தான் சொல்ல வேண்டும். எனக்காகப் பிறர் விளம்பரம் செய்யமாட்டார்கள். என்றார்

பின்னர், 38 நாட்கள் பயணக் கைதியாக இருந்து வெளியே வந்ததும், பலம் மிக்க ஆள்களைத் திரட்டிச் சென்று கடற்கொள்ளையர்களுடன் போரிட்டு, தான் சொன்னது போலவே அவர்கள் அத்தனை பேரையும் கழுத்தை அறுத்துக் கொன்றார். இந்த வெற்றியைப் பெரும் பொருட் செலவு செய்து கொண்டாடினார். ''ஏன் இப்படிச் சுய தம்பட்டம் அடிக்கிறார்கள்?'' எனப் பிறர் கேட்டபோது, ''உன் தகுதியை நீயே உரக்கச் சொல். பிறருக்காகக் காத்திருக்காதே!' எனக் கூறினார். சுமார் ஒன்பது ஆண்டுகள் நடந்த இந்த ''கவுல்' போராட்டத்தில், சுமார் இருபது லட்சம் பழங்குடியினர் கொல்லப்பட்டனர். பத்து லட்சம் பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். இந்தப் போர், சீஸருக்கு செனட் சபையிலும், மக்கள் மனதிலும் நிரந்தர இடத்தையும், புகழையும் பெற்றுத் தந்தது. அறுவை சிகிச்சை மூலம் பிறந்த முதல் குழந்தை ஜுலியஸ் சீஸர். ரோம் நகர அதிகாரத்தில் இருந்த மரியஸ், சீஸரின் உறவினர். எனவே, சீஸரால் மிக எளிதாக படைத் தளபதியாகி, போர்களில் பங்கேற்று வெற்றிகள் குவிக்க முடிந்தது. மரியஸுக்குப் பிறகு ரோம் நகரின் அறிவிக்கப்படாத சர்வாதிகாரியாகச் செயல்படத் தொடங்கினார் ஜுலியஸ் சீஸர். ரோமன் காலண்டர் மாற்றியமைக்கப்பட்டது. நகரெங்கும் சீஸரின் சிலைகள் நிறுவப்பட்டன. நாணயங்களில் அவரது உருவம் பொறிக்கப்பட்டது. தன் புகழ் இந்தப் பூமி உள்ள வரை நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக, பெரும் செலவுகள் செய்தார் சீஸர். அவரை இனியும் விட்டுவைத்தால், ரோம் சீரழிந்துவிடும் எனக் கூறி அவருக்கு வேண்டப்பட்டவர்கள் சிலரே அவரைக் கொல்லத் துணிந்தார்கள். எல்லோரும் அவரைக் கத்தியால் குத்த, தான் தனது மகனைப்போல நினைத்திருந்த புரூட்டஸிடம் ஓடினார் சீஸர். அவனும் கத்தியெடுத்துக் குத்தவே, ''யூ டூ புரூட்டஸ்'' என்று பதறித் துடித்தபடி உயிரைவிட்டார். ஜுலியஸ் சீஸர் விமர்சனத்துக்கு உரியவராக இருந்தாலும், அவரைப் புகழின் உச்சியில் ஏற்றிவைத்தது, ''உன் தகுதியை நீயே உரக்கச் சொல். பிறருக்காகக் காத்திருக்காதே!' என்கிற அவரது மந்திர வாக்கியம்தான். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை 8 ஓர் வரைபடம்

நிலா கடிதத்தைப் பிரித்து பார்த்த போது, நிலாவால் அவளது கண்ணீரைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.காரணம் நிலாவுக்கு ஆஸ்திரேலியா செல்வதற்கு விசா வந்து விட்டது. உடனே நிலாவின் அம்மா ஒன்றுமே தெரியாதவர் போல ''என்ன கடிதம் ?'' என்று வினவினார். அதற்கு நிலா மெதுமையும் சோகமும் நிறைந்த குரலில் '' எனக்கு விசா வந்து விட்டது.'' என்று கூறினாள். அத்தோடு நான் அடுத்த கிழமையே புறப்பட வேண்டும் என்றும் கூறினாள்.நிலாவால் அவளது குடும்பத்தை விட்டுப் பிரிய மனசே இல்லை.ஆனால் அவளது பொறுப்புகளை நினைக்கும் போது அவள் போய்த் தான் ஆகவேண்டும் என்று தோன்றியது. அத்தோடு அவளின் காதல் பற்றி நினைக்கும் போது ஏற்படும் கவலை, அவளை வெளிநாடு செல்ல தூண்டியது. நிலாவின் அம்மா பெரும் பரபரப்போடு நிலாவை வெளிநாடு அனுப்ப தயார் ஆனார்.நிலாவிற்கு ஆஸ்திரேலியாவில் ஒரு பெரியம்மாவும் ஒரு சித்தப்பாவும் இருந்தனர், ஆனால் நிலாவின் அம்மாவுக்கு நிலாவை அங்கு அனுப்ப விருப்பம் இல்லை. அதனால் நிலாவை அவரின் தோழி வீட்டில் தங்கி படிக்க வைக்க நினைத்தார். இதற்கு நிலாவும் சம்மதம் தெரிவித்தாள்.

**நிலா பயணம் போகும் நாள் வந்தது..........**

பல மணி நேரத்துக்குப் பிறகு நிலா ஆஸ்திரேலியாவை அடைந்தாள் .....

இனி என்னை நான் தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்துக் கொண்டு காலடி எடுத்து வைத்தாள். நிலாவின் அம்மாவின் தோழி அங்கு நிலாவின் வருகைக்காகக் காத்திருந்தார் , அவர் பெயர் அனுஷா. நிலாவைக் கண்டவுடன் அனுஷா நிலாவைக் கட்டிப் பிடித்து ''அச்சு அசல், அம்மா மாதிரியே இருகிறீர்'' எண்டு சிரித்த முகத்துடன் அவர்களின் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். வீட்டுக்குச் சென்ற நிலா, அவள் பாதுகாப்பாக வந்து சேர்ந்துவிட்டதை தெரிவிக்க அவளின் அம்மாவிற்கு தொலைபேசியில் அழைத்தாள்.நிலா பாதுகாப்பாக இருப்பதை இட்டு பூரித்து போனார் நிலாவின் அம்மா.

மறுநாள் நிலாவை அவளின் கல்லூரியில் சேர்க்க நிலாவை அழைத்து சென்றார், அனுஷா.

நிலாவும் பல ஆசைகளோடு கல்லூரியில் படிக்கத் தொடங்கினாள்.

சில மாதங்களுக்கு பிறகு ...

கல்லூரி முடித்து வீடு வந்த நிலா , அனுஷா அக்காவிடம் வழக்கம் போல கல்லூரியில் நடந்ததைக் கூறினாள். எதையும் சிரித்த முகத்தோடு கேட்கும் அனுஷா அக்காவின் முகம் அன்று வாடி இருந்தது. இதை பார்த்த நிலா ''அக்கா ஏதாவது பிரச்சினையா?''என்று பணிவாகக் கேட்டாள். அதற்கு அனுஷா ' நீ இனிமேல் இந்த வீட்டில் இருக்க முடியுமோ என்று எனக்கு தெரியாது' என்று முகத்தில் அறைவது போல கூறி விட்டு சென்றார். நிலாவால் ஏன் இவர் இப்படி கூறுகிறார் என்று கணிக்கவே முடியவில்லை. ஒரு சில நேர மௌனத்துக்கு பிறகு நிலா, அனுஷாவிடம் ஏன் அக்கா , நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? என்று கேட்க

சி சீ .. நீ ஒன்றுமே செய்யவில்லை. என்னுடைய கணவனுக்கு வேறு இடத்தில் வேலை கிடைத்து விட்டது . அதனால் நாங்கள் வீடு மாறி போக வேண்டும் என்று கூறி முடித்தார். நிலாவிற்கு என்ன செய்வது என்று தெரியாமல், கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க முடிவெடுத்தாள். இந்த விடயத்தை நிலாவின் அம்மாவிடம் கூறுகையில் அவர் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க மறுத்தார்.

ஒரு நாள் நிலாவின் அம்மா நிலாவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சித்தப்பா வீட்டில் போய் தங்கி இருந்து படிக்குமாறு கூறினார்,ஆனால் அது நிலாவுக்கு முழுமையாகப் பிடிக்கவே இல்லை. இருந்தாலும் அம்மா கூறிய ஒரே காரணத்துக்காக சித்தப்பா வீட்டுக்குச் செல்ல தயாரானாள்.

■ நிவேதிதா மோகன்.

# உங்களை நீங்களே பாதுகாக்க...!



இன்று பெண்களுக்கு தற்காப்பு என்பது மிகவும் அவசியமாகிவிட்டது.வன்முறை, சித்திரவதை, பாலியல் போன்ற அவல நிலைக்கு ஆளாகும் பெண்கள் தற்காப்பு கலையை கற்று வைப்பது அவசியம். இந்த நிலையில், பெண்கள் தங்களைப் பாலியல் வன்கொடுமை களில் இருந்து தற்காத்துக் கொள்ள சில விஷயங்களைப் பின்பற்றவேண்டும்.

''தனியாக பயணம் செய்யும்போது, அந்த இடத்தின் சுற்றுபுறத்தில் ஏதாவது தப்பாக இருப்பதுபோல் தெரிந்தால் உடனடியாக அந்த இடத்திலிருந்து வெளியேறுங்கள்.

''யாராவது உங்களை கேலி, கிண்டல் செய்தால் தைரியமாக எச்சரியுங்கள், அதை மீறியும் கேலி கிண்டல் தொடர்ந்தால் கூச்சப்படாமல் அருகிலிருப்பவர்களை உதவிக்கு அழையுங்கள்.

''முடிந்தவரை இரவில் தனியாக பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதை தவிர்த்துவிடுங்கள்.

''உங்கள் சொந்த வாகனத்தில் பயணிக்கும்போது, அந்நியர்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். தனிமையான இடத்தில் வாகனத்தை நிறுத்த வேண்டாம். வழக்கப்பட்ட வழியிலேயே செல்லுங்கள், புதிய வழிகளை தேர்ந்தெடுக்க வேண்டாம்.

''உங்களை யாராவது பின்தொடர்வது போல் தெரிந்தால், உடனடியாக கூச்சலிட்டு உதவிக்கு யாரையாவது அழையுங்கள். பயத்தில் அவசரமாக ஓடும்போது கூட கூச்சலிட மறவாதீர்கள்.

''தொலைபேசியில் அவசர தேவைக்காக முக்கியமான நண்பர்கள் அல்லது குடும்ப நபர்களின் எண்ணை பதிவு செய்து வையுங்கள்.

''தனியாக பயணிக்கும்போது கைத்தொலைபேசியை கையில் வைக்காதீர்கள், ஒரு வேளை யாரிடமாவது சிக்கிகொண்டால் முதலில் கைத்தொலைபேசியைத் தான் உங்களிடமிருந்து பறிப்பார்கள்.

''இவை அனைத்தையும் மீறி, பாலியல் வன்முறையை எதிர்கொள்ள நேரிட்டால், உடனடியாக கைத்தொலைபேசியில் நீங்கள் கடைசியாக பேசியவர்களுக்கு, போனை கையில் வைத்தபடியே தொடர்பு கொண்டு நீங்கள் இருக்கும் இடத்தை சத்தமிட்டு கூறுங்கள்.

''பையில் இருக்கும் குடை, பேனா போன்றவற்றை பயன்படுத்தி காமுகர்களை காயப்படுத்தி தப்பிக்கலாம்.

''உங்கள் எதிராளியை தாக்கும்போது முழு வலுவையும் பயன்படுத்தி முதல் அடியிலேயே அவனை வீழ்த்த முயலுங்கள். உங்களை தற்காத்துக்கொள்ள எதிராளியின் முன்பக்க கழுத்துப் பகுதி, மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் பலமாக குத்துங்கள். எதிராளியை சமாளிக்கும் அளவுக்கு சக்தியில்லை என்றால் சற்றும் யோசிக்காமல் விரல்களினால் அவனில் கண்களை குத்திவிட்டு ஓட்டமெடுங்கள்.

''நடை முறையில் பின்பற்ற கடினமாக இருந்தாலும், ஒரு சிறிய கவரில் மிளகாய் பொடியை நிரந்தரமாக பையில் வைத்திருங்கள்.

- இவ்வாறான தற்காப்பு முறைகளை பயன்படுத்தித்தான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற அவல நிலை மாறும் வரை பெண்கள் உஷாராக இருப்பது அவசியமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மல்லாவி, பாண்டியன்குளம் கிராமங்களுக்கு 290 மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர்



கிளிநொச்சி, ஜ*ன் 3
மல்லாவி மற்றும் பாண்டியன் குளம் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.
290 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இந்த இரண்டு திட்டங்களினூடாகவும் 6 ஆயிரத்து 760 குடும்பங்கள் பயன்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மல்லாவி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் 192.2 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதன் கீழ் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில் பயன் பெறுகின்றன.
குறித்த திட்டம் 2011 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் முடிவுறுத்தப்பட்டு கடந்த மாதம் 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இது 275 கனமீற்றர் கொள்ளளவு உடைய நீர்த்தாங்கி, அலுவலகம் மற்றும் களஞ்சிய அறை, பம்பி அறைகள், மேலும் 31 கிலோமீற்றர் நீளமான குழாய்களை உள்ளடக்கியதாகும்.
இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு தேவையான குடிதண்ணீரானது மல்லாவியிலுள்ள கிணறு மற்றும் இரண்டு குழாய்க் கிணறுகளிலிருந்தும் தேறாங்கண்டல், அனிச்சன் குளத்திலுள்ள இரண்டு குழாய் கிணறுகளிலிருந்தும் பெறப்படுகின்றது.
பாண்டியன் குளம் குடிதண்ணீர் விநியோகத்திட்டமானது 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 198.5 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டமானது பாண்டியன் குளம், கரும்புள்ளியான், பூவரசங்குளம், பொன்நகர், விநாயகபுரம் மற்றும் நட்டாங்கண்டல் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய இரண்டாயிரத்து 260 பயனாளிகளைக் கொண்டதாகும்.
225 கனமீற்றர் கொள்ளளவு உடைய நீர்த்தாங்கி, அலுவலகம் மற்றும் களஞ்சிய அறை, பம்பி அறைகள், விடுதிகள், 23 கிலோமீற்றர் நீளமான குழாய்களை உள்ளடக்கியதாகும்.
இந்தத் திட்டத்துக்கு தேவையான நீரானது பாண்டியன் குளத்திலுள்ள 3 குழாய்க் கிணறுகளிலிருந்து பெறப்படுகின்றது. (ஐ-5)

# இலவச மின் இணைப்பு

## 6 ஆயிரத்து 830 குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்



வவுனியா, ஜூன் 3
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்வு செய்யப்பட்ட 6 ஆயிரத்து 830 குடும்பங்களுக்கு இலவசமாக மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பிரதேசத்துக்கான பிரதம மின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடபகுதியிலுள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா உட்பட பல மாவட்டங்களில் போர் இடர்களால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்தவர்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
இவ்வாறு இலவசமாக மின் இணைப்பு வழங்கப்பட்டாலும் முதலாவது மாதத்திலிருந்தே மின்பாவனையாளர் மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
வடபகுதியில் மீள்குடியமர்ந்தவர்களில் சுமார் 6 ஆயிரத்து 830பேருக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக எரிபொருள் மின்சக்தி அமைச்சினால் 33.41 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.
குறிப்பாக ஒரு வருடத்துக்கு இலவச மின்சாரம் என்ற திட்டத்தின் கீழ் இவ்வாறு பணம் செலுத்தப்பட்டது.
ஆனால் தற்போது இலவசமாக மின்னிணைப்புக்கள் வழங்கப்படுகின்றபோதிலும் முதலாவது மாதத்திலிருந்து மின் கட்டணத்தை பாவனையாளர்களே செலுத்த வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (க-400)

## நாடகப் போட்டி முடிவுகள்

வவுனியா, ஜூன் 3
வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற வலயமட்ட கணித நாடகப் போட்டிக்கான முடிவுகள் வெளிவந்துள்ளன.
உயர்தர பிரிவில் வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயம் முதலாவது இடத்தையும், வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன.
கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தை வவுனியா சைவப் பிரகாச மகளிர் வித்தியாலயமும், இரண்டாவது இடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும், மூன்றாவது இடத்தை வவுனியா விபுலானந்தாக் கல்லூரியும் பெற்றுள்ளன.
கணித எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு மாணவர் மத்தியில் கணித பாட கற்றலை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையாக இந்த கணித நாடகப் போட்டிகள் வருடா வருடம் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)


## காணி ஆக்கிரமிப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் மன்னாரில்



மன்னார், ஜூன் 3
மன்னார் மாவட்டத்தில் காணி ஆக்கிரமிப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கூட்டம் ஒன்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.
மன்னார் மாவட்டத்தில் அரச, தனியார் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது என்பது தொடர்பாகவும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.
இதேவேளை காணி உறுதியில் மாற்றம் செய்வது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.
இதற்கான விரிவுரைகளை சட்டத்தரணி எஸ்.வினோதன் மற்றும் ஓய்வு பெற்ற காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் வழங்கினர். இந்தக் கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)


## இராணுவத்தினரின் கெடுபிடியால் வன்னிவிளாங்குளத்தில் அச்சம்

முல்லைத்தீவு, ஜூன் 3
முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் சந்தியில் இடம்பெறும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.
மேற்படி சந்தியில் வீதித் தடைகள் போடப்பட்டு அதனூடாகப் பயணிக்கும் சகல வாகனங்களும் சல்லடை போட்டு சோதனையிடப்படுவதுடன் இராணுவப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே மேற்கொண்டு பயணிப்பதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மேலும் குறித்த சந்திப் பகுதியில் தனியார் ஒருவரால் கட்டப்பட்ட பஸ் தரிப்பிடம் இராணுவத்தின் முழுமையான ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டதால் பயணிகள் அதில் தங்கி நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் இரவு சடலம் ஒன்றை மல்லாவிக்கு கொண்டு சென்ற போது அதனையும் இராணுவத்தினர் சோதனையிட்டதுடன் பதிவுகளையும் மேற்கொண்டனர்.
இதைவிட பயணிகளின் பயணப் பைகளும் கடுமையாகச் சோதனையிடப்படுகின்றன.
இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளதாகவும், இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் தமக்கு அச்ச உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-6)





## ஆலய உண்டியல் திருட்டு



நெடுங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள அருள் மிகு ஐயனார் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் திருடப்பட்டுள்ளது.
நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் நள்ளிரவு வேளையில் ஐந்து பேருக்கு மேற்பட்ட குழுவினரால் திருடப்பட்டுள்ளது. திருடப்பட்ட உண்டியல் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் இதில் பெரும் தொகைப் பணம் இருந்ததாகவும் ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (க-435)

## ஒட்டுசுட்டானில் வாகன சுத்திகரிப்பு நிலையம்

### விரைவில் அமைக்கப்படும் என்கிறார் அரச அதிபர்



முல்லைத்தீவு, ஜூன் 3
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாகனச் சுத்திகரிப்பு நிலையமொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் -இவ்வாறு முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
ஒட்டுசுட்டானில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;
ஒட்டுசுட்டான் பிரதேசம் மெதுமெதுவாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இங்கு வசிக்கும் மக்களுக்குத் தேவையானவற்றை இயலுமானவரை பெற்றுக் கொடுப்பதற்கு ஆயத்தமாக உள்ளோம்.
இந்தப் பிரதேசத்தில் வாகனச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் அதேவேளை, இந்தப் பகுதிவாழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படுகின்றன. கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் ஆகியவற்றை ஒழுங்காக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இந்த எரிபொருள் நிலையம் இங்கு வாழும் விவசாய மக்களுக்கு மிகவும் உதவும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.
மேலும் இந்தப் பகுதியில் வாகனச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான காணியை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவு செய்து தரும் பட்சத்தில் நெற்களஞ்சியம், அரிசி ஆலை போன்றவற்றையும் அமைக்க ஆலோசித்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார். (க-500)

## நூல்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 3
வட்டக்கச்சி பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. வட்டக்கச்சி பொது நூலகத்தினர் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.
வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான ஒருவர் மூலமாக சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.
இந்த நூல்களில் மாணவர்களுக்கான புத்தகங்களும், அறிவியல் சார்ந்த நூல்களும் வரலாற்று நூல்களும் அடங்கியுள்ளன.
இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நன்மையடைய முடியுமென வட்டக்கச்சி பொது நூலகத்தின் நூலகர் தெரிவித்துள்ளார். (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**இடபர்:** எதையும் தாங்கும் மன வலிமை கிட்டும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மிதுனர்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த தயக்கம், தடுமாற்றம் யாவும் நீங்கும். கோபம் தணியும். தாழ்வுமனப்பான்மை நீங்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும்.

**கடகர்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் குறைவாகப் பேச வேண்டாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங் கள் உண்டு.

**சிங்கர்:** உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**கன்னி:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். திடீர் யோகம் கிடைக்கும்.

**நாளை**

வைகாசி-21 செவ்வாய்க்கிழமை 04.06.2013
திதி: ஏகாதசி பி.ப.04.37 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப. 01.05 வரை
சுபநேரம்: 10.22 - 11.52 வரை
இராகுகாலம்: 02.52 - 04.22 வரை

**துலார்:** உங்களை சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருச்சிகர்:** பால்ய நண்பர்கள் உதவுவார்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**தனுசு:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**மகரர்:** வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். தடைப்பட்ட புதிய முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கும்பர்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**மீனர்:** எதிர்காலம் பற்றிய பயம் வந்து செல்லும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வரக்கூடும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 2 | | | 7 | 8 |
| 2 | | 7 | | | | 4 | | |
| 9 | 4 | 5 | 8 | | | | | |
| | | 8 | 1 | | 4 | 3 | | |
| | 7 | | 9 | 5 | 2 | | 4 | |
| | | 9 | 6 | | 8 | 7 | | |
| | | | | | 1 | 9 | 6 | 3 |
| | | 3 | | | | 2 | | 4 |
| 6 | 9 | | | 8 | | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 4 | 2 | 9 | 5 | 7 | 8 |
| 2 | 8 | 7 | 3 | 6 | 5 | 4 | 9 | 1 |
| 9 | 4 | 5 | 8 | 1 | 7 | 6 | 3 | 2 |
| 5 | 6 | 8 | 1 | 7 | 4 | 3 | 2 | 9 |
| 3 | 7 | 1 | 9 | 5 | 2 | 8 | 4 | 6 |
| 4 | 2 | 9 | 6 | 3 | 8 | 7 | 1 | 5 |
| 8 | 5 | 2 | 7 | 4 | 1 | 9 | 6 | 3 |
| 7 | 1 | 3 | 5 | 9 | 6 | 2 | 8 | 4 |
| 6 | 9 | 4 | 2 | 8 | 3 | 1 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ஒரு அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல்

## மரண அறிவித்தல்

## கந்தையா சிவரத்தினம்

### (C.K.S)



கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகவும், முன்னாள் பதுளை ஸ்பிரிங்வெலி மற்றும் பொகவந்தலாவை தேயிலைத் தோட்டங்களின் தலைமைக் குமாஸ்தாவாகப் பணி புரிந் தவரும், தற்போது யாழ்ப்பாணம் இல. 33, புதிய வீதி, அத்தியடி எனும் முகவரியில் வசித்தவருமாகிய C.K. சீவரத்தினம் நேற்று முன்தினம் (01.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற பாக்கியரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, ஞானபூரணம் மற்றும் லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவபதி(ஜேர்மன்), ஜீவேந்திரன் (பதுளை), வர்ணகுலசிங்கம் (கனடா), பாலேந்திரன் (சவூதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவக்கொழுந்து, நடராஜா (ஜேர்மனி), இந்துமதி (பதுளை), சறோஜினி (கனடா), கலாநாயகி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்தூரா, மயூரன்(ஜேர்மனி), சாஹித்தியா, சுகன் (கனடா), நவீன் (கனடா), கஜஸ்திகன், சிவஸ்திகா, நிருத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜேர்மனியைச் சேர்ந்த மயூரன் லாவன்யனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2013) திங்கள்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 33, புதிய வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 27 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
19 * 05 * 1918



உதிர்வு
08 * 05 * 2013

### அமரர் குமாரசாமி பாக்கியம்

கடந்த (08.05.2013) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் (01.06.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.06.2013) திங்கள்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலைநிதி வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(37925)(14.9.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த காலாண்டில் 21 பேர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

கடந்த காலாண்டில் மாத்திரம் விபத்தில் சிக்கி 21 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடத்தைய முதல் காலாண்டில் விபத்தில் சிக்கி உயிரிழந்தோரை விட இந்த வருடம் விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆல் அதிகரித் துள்ளது என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் விபத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். இந்த வருடம் ஜனவரியிலிருந்து மே மாதம் வரையான காலாண்டில் மாத்திரம் 21 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த அதிகரிப்புக்கு இங்கு வீதிகள் 'காப்பெற்' ஆக்கப்பட்டமை யால் கட்டுப்பாடின்றி வேகமாகப் பயணிப்பதும் காரணமாக இருக்கலாம். விபத்தைத் தவிர்க்க ஒவ்வொருவரும் அவதானமாகப் பயணித்தல் வேண்டும் - என்றார். (த-4)

## கொழும்புத்துறை பகுதியில் வீடு புகுந்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன் 2




பட்டப்பகலில் வீடு புகுந்த திருடர்கள் அங்கு இருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வீட்டில் கணவன் - மனைவி இருவரும் தொழில் நிமித்தம் சென்றவேளை, அங்கு தனித்திருந்த வயோதிபமாது வீட்டின் முற்பகுதியில் இருந்துள்ளனர். அதேவேளை அருகில் உள்ள காணி வழியாக உள்நுழைந்த திருடர்கள் சமையல் அறை மேல் கூரை வழியாக நுழைந்து அறையில் இருந்த சுமார் 5 பவுண் நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த சமயம் அலுமாரி உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு வீட்டார் அதிர்ச்சியடைந்தனர். சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதும், அங்கு விரைந்து வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ)

## விபத்தில் மூவர் காயம்



“ ஒருவரின் நிலை மிக மோசமாக இருந்தமையால் அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார்.

வலி.வடக்கு, ஜூன் 3

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதுண்டதில் மூவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் மருதனார் மடம் சந்திப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்ற இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் காயப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு ஏற்றி வந்தது.

இருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவரின் நிலை மிக மோசமாக இருந்தமையால் அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார்.(த-86)

# வடக்கில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

### நல்லினப் பசுக்களை உருவாக்கத் திட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் நல்லின பசுக் கன்றுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வடமாகாண விவசாய, கால்நடை, காணி, நீர்ப்பாசன மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு அமைச்சின் செயலாளர் யு. எல்.எம்.ஹால்டின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்தில் 2 இலட்சத்து 84 ஆயிரத்து 535 பசுக்கள் உள்ளன. இவற்றில் 69 ஆயிரத்து 810 நல்லினப் பசுக்கள் உள்ளன. இவற்றின் ஊடாக வட மாகாணத்துக்கு தேவையான பால் உற்பத்தி பெறப்படுகிறது. கடந்த வருடம் இந்தப் பசுக்கள் ஊடாக 24.3 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி பெறப்பட்டது.

இந்த வருடம் மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க நல்லினப் பசுக்கன்றுகளை உருவாக் கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற் கமைவாக தெரிவு செய்யப் பட்ட 3 மாவட்டங்களில் இதற் கான பணிகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்கள் நல்லினக் கன்றுகளை உரு வாக்க ஏதுவான இடங்களாக இருப்பதால் பண்ணை வளர்ப் போரை ஊக்கப்படுத்தி நல்லினப் பசுக் கன்றுகளை வளர்த்து அதனூடாக அதிகளவு பால் உற்பத்தியைப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென அந்தந்த மாவட்டங்களின் கால்நடைத்திணைக் களங்கள் ஊடாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்- என்றார். (த-14)

## வடமராட்சிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கரவெட்டி பகுதி வெளிக்களச் சுகாதாரப் பரிசோதகர்களும், நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கரணவாய், கரணவாய் கிழக்கு, கரவெட்டி, கரணவாய் தெற்கு, இமையாணன், சோளங்கன், மண்டான், செல்வாபுரம், போன்ற பகுதிகளிலேயே டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக வீடு வீடாகச் சென்று பரிசோத னைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கரவெட்டிப் பிரதேச வெளிக்களப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர். ரட்ணவேல் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் பொலிஸாருடன் இணைந்து ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலீத்தீன் பை, சிரட்டை, ரயர் மற்றும் நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்கள், நீர்த் தேங்கி நிற்கும் இடங்கள் என்பவற்றை இனம் கண்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குயிடிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருவதுடன் மோசமான பாதிப்புக்கள் ஏற்படும் என இனம் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையும் . இந்தக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (400)

## மக்கள் பலமே ஜனநாயகத்தின் பலம் வாக்குரிமையே உங்கள் பலம்



இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட வாக்களர்கள் தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது வாக்காள ராகப் பதிய வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தால் யாழ்.நகர் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (ஒ-ரி)

## ஒரு வயதுக் குழந்தையை கண்டபடி கடித்த நாய்

வலி.வடக்கு, ஜூன் 3

நாயினால் கடியுண்ட ஒரு வயதுக் குழந்தை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை



“ வீட்டில் வளர்த்த நாய் தலை, முகம், காது ஆகிய வற்றில் கடித்துள்ளது.

யில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

தாயார் பிள்ளைக்கு உணவு ஊட்டிவிட்டு கைகழுவச் சென்றுள்ளார். கையில் உணவுடன் இருந்த குழந்தையை வீட்டில் வளர்த்த நாய் தலை, முகம், காது ஆகியவற்றில் கடித்துள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த லவதீபன் கிசாந் (வயது-1) என்ற குழந்தையே இவ்வாறு நாயினால் கடியுண்ட குழந்தையாகும். (த-86)

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 5 ஆவது ஆண்டாக இரத்த தானம்

வலி.வடக்கு, ஜூன் 2

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்வரும் புதன்கிழமை ஐந்தாவது ஆண்டாக இரத்த தானம் வழங்கவுள்ளனர்.

இரத்ததானம் வழங்குவதால் உடலுக்கு எந்தவித கேடும் ஏற்படாது என்பதை உணர்த்தும் வகையில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்த இரத்த தானம் இடம்பெற்று வருகின்றது.

வருடாந்தம் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், மாண வர்களும் இரத்தானம் செய்து வருகின்றனர்.

இந்த வகையில் இந்த ஆண்டும் எண்பத் தைந்துக்கும்



மேற்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பாடசாலை அதிபர் எஸ்.கிருஸ்ணகுமார் தலைமையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## விரிவுரையாளர் விபத்தில் காயம்

வலி.வடக்கு, ஜூன் 2

கீரிமலை கவுணாவத்தை ஆலய வேள்விக்காக வளர்க்கப்பட்ட கடாக்களைப் பார்வையிட்டு திரும்பிய பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ஓட்டோவினால் மோதப்பட்டு காலில் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பதினொரு மணியளவில் கருகம்பனைப் பகுதியில் உள்ள ஒழுங்கையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வேகமாக வந்த ஓட்டோ மோட்டார் சைக்கிளில் சென்ற விரிவுரையாளரை மோதியதில் அவரின் காலில் உடைவு ஏற்பட்டுள்ளது. தெல்லிப்பழை பொலிஸார் இந்த விபத்து சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் முந்திப்போவது? நீயா, நானா...?



யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்கள் முட்டி மோதிக் கொண்டன. இந்த விபத்தில் ஒருவர் பலத்த காயமுற் றார். அவரை அந்தப் பகுதி வர்த்தகர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (ஒ-ரி)

# வியாபார நிலையத்துக்கே விளம்பர பலகை வழிபாட்டுத் தலத்தை தேடி வழிபடுவதே பக்தி

### மட்டுநகரில் புத்தர் சிலை அமைப்பது குறித்து மனோ

கொழும்பு, ஜூன் 3
மட்டக்களப்பு மங்களராமய விகாரை ஒரு மத தலம். அது வியாபார நிலையமாக இருக்க முடியாது. மத வழிபாட்டு தலங்களுக்கு வருகை தருபவர்கள் தேடிவந்து வழிபட வேண்டும்.
இருக்கும் இடத்தையும், வரும் வழியையும் அடையாளப்படுத்த விளம்பரப் பலகை வைப்பது வியாபார நிலையங்களே. இதை விகாரதிபதி மறந்து போய்விட்டார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு மங்களராமய விகாரதிபதி மட்டக்களப்பு வரவேற்பு எல்லையில் புத்தர் சிலை ஒன்று வைக்க முற்பட்டதைக் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அந்த முயற்சி நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் மங்களராமய விகாரைக்கு வருவதை அடையாளப்படுத்தவே புத்தர் சிலை வைக்கப்போவதாக மங்களராமய விகாரதிபதி தெரிவித்திருந்தார்.
இந்த விடயம் தொடர்பாக மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-
விகாரதிபதி அம்பிட்டிய சுமண ரத்தின தேரர் தேவையற்ற மத அடிப்படைவாத முரண்பாட்டை ஏற்படுத்துகின்றார்.
புகழ் பெற்ற மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தை அடையாளப்படுத்தும் வகையில் மாபெரும் பிள்ளையார் சிலைகளை இந்துக்கள் மட்டக்களப்பு நகரை அடையும்அனைத்து சாலை நுழைவாயில்களிலும் அமைக்க முடியும்.
இந்துக்கள் இல்லாத இடங்களில் இந்து கோயில்கள் ஒரு போதும் கட்டப்படுவது இல்லை. இன்று எங்காவது இந்து மக்கள் இல்லாத இடங்களில் இந்துக் கோயில்கள் இருந்தால் அங்கு ஒரு காலத்தில் இந்துக்கள் இருந்தார்கள் என்பதே உண்மை.
மத பக்தர்கள் தாம் வாழும் இடத்தில் கோயில் அல்லது விகாரை கட்டுவதென்பது ஒன்று. கட்டப்பட்டு இருக்கும் கோயில் அல்லது விகாரையை அடையாளப்படுத்துவதற்காக வழியெங்கும் சிலைகளை நிறுவுதென்பது வேறு.
இவற்றை விளம்பரப்படுத்துவதற்காக விளம்பரப்பலகை வைப்பதென்பது இன்னொன்று. விகாரதிபதி இவை மூன்றையும் ஒன்றாக கருதி கருத்து தெரிவிப்பது தேவையற்ற மத அடிப்படை வாத முரண்பாட்டை ஏற்படுத்தும்- என்றார். (ஐ-5)

# நவீன சந்தை கடைகளின் உரிமை மாற்றம் மாநகர சபைக் கூட்டத்தில் ஆட்சேபம்

### கண்டனமும் தெரிவித்தனர் எதிரணியினர்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான நவீன சந்தைக் கடைகளின் உரிமை மாற்றம் தொடர்பாக சபைக் கூட்டத்தில் எதிரணியினர் பலத்த ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்தனர்.
172 கடைகளின் உரிமை மாற்றம் தொடர்பில் மாதாந்தக் கூட்டம் ஒன்றில் உப குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு 11.4.2013 கூடியபோது எடுக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்படாத விடயங்கள் அறிக்கையில் இருப்பதால் இந்த அறிக்கையில் தான் கையொப்பமிடப்போவதில்லை எனவும் தாங்கள் அறிக்கையை ஆதரிக்கவில்லை எனவும் எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.
172 கடைகளும் உரிமை மாற்றம் செய்வதாயின் தற்போது நடைமுறையில் உள்ள மாத வாடகையின் 21 வருட வாடகைப் பணத்தை உரிமைப் பணமாகப் பெற்று உரிமை மாற்றம் செய்வதாகவும்.
உரிமை மாற்றம் செய்வதற்கான பணம் செலுத்தும் இறுதித் திகதி 31.12.2013 எனவும் அந்தத் திகதியில் பணம் செலுத்தாத கடைகளை சபை பொறுப்பேற்க வேண்டும் எனவும் இதற்கு மேலாக 172 கடைகளையும் பகிரங்க ஏலத்தில் விற்க வேண்டும் எனவும் தீர்மானங்களில் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததாகவும் அவை அந்தப் பரிந்துரைகளுக்கு முரணாக தற்போது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.
குழுவில் பேசப்படாத விடயங்கள் அறிக்கையில் உள்ள நிலையில் அதனை ஆதரிக்குமாறு கோருகின்றீர்கள் சட்டத்துக்கு அமைவாக மக்களைப் பாதிக்காதவாறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.
இந்த விடயம் தொடர்பாக மீண்டும் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் இந்தக் குழுவில் முதல்வரையும் இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-7)

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி பின்வரும் இடங்களில் ஏற்றப்படவுள்ளது.
இன்று திங்கட்கிழமை காலை 9-11 மணி வரை வள்ளுவன் ச.ச. நிலையத்திலும், முற்பகல் 11-1 மணி வரை கே.கே.எஸ். வீதி கலைமகள் சனசமூக நிலையத்திலும், நாளை செவ்வாய்க் கிழமை காலை 9-11 வரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும், முற்பகல் 11-1 மணிவரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும். நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9-11 மணி வரை நாவலர் வீதி அன்ன சத்திர லேனிலும், முற்பகல் 11-1 மணிவரை மணிக்கூட்டு ஒழுங்கை பகுதியிலும், 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9-11 மணிவரை சபாபதி ஒழுங்கையிலும் விலங்கு விசர் நோய்த் தடுப் பூசி ஏற்றப்படவுள்ளது என அறிவித்துள்ளனர். (ந)


## வாழ்த்து



யா/ புங்குடுதீவு சுப்பிரமணிய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலுகின்ற நெடுந்தீவு பிரதேசசபையின் தவிசாளர் டானியேல் றெக்சியன் அவர்களின் மகள் செல்வி றெக்சியன் டொறினா அவர்கள் வடமாகாண பாடசாலை களுக்கிடையிலான "விழுமல்" என்ற கவிதை தொகுப்பை எழுதி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை தொழிலாளர் சங்கம் - நெடுந்தீவுப் பிரிவு
நெடுந்தீவு வாழ்மக்கள் சார்பாக.


## 228 சமுர்த்தி அலுவலர் யாழில் புதிதாக நியமனம்

யாழ்.மாவட்டத்தில் 228 புதிய சமுர்த்தி உத்தியோகத்தர்களுக் கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென் ரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 228 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளர், யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர், யாழ்.மாநகர முதல்வர், பிரதேச சபைத் தவிசாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (த-7)


**நீர்வேலி வடக்கு, கம்பன்புலம் அருள்மிகு அண்ணமார் ஆலய திருப்பணி நிதிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்**

முதலாம் பரிசு - 4064
2ஆம் பரிசு - 3686
3ஆம் பரிசு - 1246

ஆறுதல் பரிசில்கள்
0216
4315
2383
3716
1571

பரிசில்குரியவர்கள் 15.06.2013 ஆம் திகதிக்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 0776949835 (37781) (10,6)

தலைவர் பொருளாளர் செயலாளர்


### கும்பாபிஷேகம்

நயினை ஸ்ரீநாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராஜ கோபுர கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந-7)

### கிளிநொச்சி வலய அதிபர்கள் கூட்டம்

அக்கராயன், ஜூன் 3
கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம் பெறவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.
இந்தக் கூட்டத்தில் 30 பாடசாலைகளின் நூலகங்களுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நூல்களை வழங்கவுள்ளார். (க-18)


## தொலைந்துவிட்டது

மணிப்பேஸ் ஒன்று கனகபுரம் பழைய சந்தைக்கும் ஸ்கந்தபுரம் சந்தைக்கும் இடையில் 01.06.2013 முற்பகல் 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

தொலைபேசி இலக்கம்:
0778185823, 0770545321, 0778185769
(35147) (10,6)



## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 18.05.1943 — மறைவு 05.05.2013

அமரர்
**சின்னக்குட்டி நடேசன்**

கடந்த 05.05.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 05.06.2013 புதன்கிழமை இல.03, இரத்தினபுரவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள S.K றெஸ்ரோறன்ரில் மு.ப. 11.00 மணிதொடக்கம் பி.ப 3.00 மணிவரை நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

34, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.
(35142)(10.6)
குடும்பத்தினர்.
0772803121, 0212283811



## மரண அறிவித்தல்

**சின்னையா பரிமேலழகர் (கண்டு)**
(ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்)



செம்பியன்பற்று தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பரிமேலழகர் நேற்று முன் தினம் (01-06-2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பாபிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகம்மா (ராணி) யின் அன்புக் கணவரும், கனகசபை, சுப்பிரமணியம் (சாரதி- வடகிழக்கு.ப.நோ.கூ.ச) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கயல் விழி, தயானந்தன் (இத்தாலி), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் குகானந்தன்(பிரான்ஸ்), மலர்விழி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீரஞ்சன் (கிளை முகாமையாளர், வடமராட்சி ப.நோ.கூ.ச), அசோபனா (இத்தாலி), சந்திரலேகா (பிரான்ஸ்), சஜீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சன்(ஜேர்மனி), சுகந்தனா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், திலக்ஷனா, கார்த்தீகன்(இத்தாலி), ஆர்த்தீகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03-06-2013) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்பியன்பற்று தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்பியன்பற்று தெற்கு.
செம்பியன் பற்று.
(35008)(6.11)
தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்திப் பணியால் போக்குவரத்து முடக்கம்

## அரச ஊழியர், ஆசிரியர்கள் சிரமம்

பூநகரி,ஜூன் 3
பூநகரியின் பத்தாம் கட்டையிலிருந்து முக்கொம்பன் கிராமம் வரையான வீதியை கொங்கிறீட் வீதியாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருவதால் இதனூடான போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கராயனுக்கு பூநகரி ஊடாக இடம்பெற்ற அரச பஸ் சேவை கடந்த ஒரு வார காலமாக முடங்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து முக்கொம்பன், ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். முக்கொம்பன் பாடசாலை ஆசிரியர்கள் பூநகரி பத்தாம் கட்டைச் சந்தியிலிருந்து கடந்த ஒரு வார காலமாக கால்நடையாகவும் டிராக்டர்களிலும் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரர்களின் இழுத்தடிப்பு வேலைகளால் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பலரால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## அதிகரித்த மதுவால் ஈரல் சிதைந்து குடும்பஸ்தர் சாவு

அதிகரித்த மதுப் பாவனையால் ஈரல் பழுதடைந்து வெடித்து இரத்தம் வெளியேறியதால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இவ்வாறான அதிர்ச்சித் தகவல் நேற்று சாவகச்சேரி சட்ட வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

செம்பியன்பற்று தெற்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இரத்த பேதி ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போது இறப்பு ஏற்பட்டது. அதை அடுத்து உடற் பரிசோதனை நடைபெற்ற பின்னர் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. சாவகச்சேரி பொலிஸ் நிலைய சார்ஜண்ட் குணரத்ன விசாரணைகளை நடத்தி நீதிவானிடம் அறிக்கை சமர்ப்பித்தார். நீதிவானின் பணிப்பின் பேரில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார். (ஒ-9)

HNB ASSURANCE

பாராட்டி வாழ்த்துகின்றோம்




MR. R. SENTHUJAN
FIELD MANAGER.
(SILVER MEDAL)




MR. A.B.COSTO
TEAM LEADER
(SILVER MEDAL)



MR. T.VIMAL
GROUP LEADER
(SILVER MEDAL)

[03.06.2013] இன்று CINNOMAN GRAND HOTEL இல் நடை பெறும் H.N.B ASSURANCE PLC இன் வருடாந்த விருது வழங்கும் விழாவில் பதக்கங்களைப்பெறும் எமதுஊழியர்களைப்பாராட்டிவாழ்த்துகின்றோம்.

MANAGER AND STAFF HNB ASSURANCE PLC
ZONAL OFFICE, JAFFNA.
(/9570.06.17)

கார் விற்பனைக்கு

Nissan - V.15 - KA x x x x
Toyota Corana - 17 - x x x x
மேற்குறிப்பிட்ட தொடர் இலக்கத்தை உடைய இரண்டு கார்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
மாலை 5.30 இற்கு பின்
077 076 0717

இலிகிதர் தேவை -பெண்

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்துக்கு A/L கணக்கியல் படித்த இலிகிதர் தேவை.
காலை 8.30- மாலை 5.00 மணிவரை நேரடியாக வரவும்.
தொடர்பு:-220, 1ஆம் குறுக்குத்தெரு, வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 5672200, 021 222 1500
(37942)(.06.17)

## நுண்கலைப்பீட பரீட்சைகள் காலவரையின்றி ஒத்திவைப்பு

வலி.வடக்கு ஜூன் 3
யாழப்பாணம் பல்கலைக்கழகம் நுண்கலைப் பீட மாணவர்களுக்கு இன்று நடைபெறுவதாக இருந்த பரீட்சைகள் கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாணவ மன்றப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள்.
கடந்த வாரம் நுண்கலைப் பீடத் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை நுண்கலைப் பீட மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள்.
இதனைத் தொடர்ந்து இன்று நடைபெறுவதாக இருந்த பரீட்சைகள் ஒத்திவைக்கப் பட்டன.
கடந்த வருடம் நடைபெற்று முடிந்திருக்க வேண்டிய இறுதியாண்டு பரீட்சை ஒன்றும் பதவி நீக்கப்பட்ட நுண்கலைப் பீடதலைவரினால் கடந்த இரு மாதங் களுக்கு முன்னரே நடத்தி முடிக்கப்பட்ட தாகவும் மாணவ மன் றப் பிரதிநிதிகள் சுட் டிக்காட்டியுள்ளார்கள். (ஒ-86)

## மனைவியின் போக்கால் வீடு தீக்கிரை

தென்மராட்சி, ஜூன்3
கட்டிய மனைவியின் விபரீத நடவடிக்கையால் அந்தக் குடும்பம் வசித்த வீடு இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.
இதனால்கவலையடைந்த கணவன் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி புறநகர்ப் பகுதியில் இடம் பெற்றது.
நஞ்சு அருந்திய கணவன் அயலவர்களால் சாவகச்சேரி வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
மனைவி மாற்றான் ஒருவனுடன் வாழ்க்கை நடத்தச் சென்றதன் எதிரொலியாகவே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ஒ-9)

31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
26.10.1947



மறைவு
04.05.2013

அமரர் கந்தையா தேவராசா

எம் குடும்பத்தின் குலவிளக்காய், மனிதகுல மாணிக்கமாய் சிறப்புடன் எங்களை வளர்த்தெடுத்த தெய்வத் திருவுருவே! அன்பிற்கு இலக்கணமாய், பண்பாளனாய், இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்டிய அப்பா! இன்று எம் அன்புத் தெய்வமாகிவிட்ட தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தி பெற்றுசொர்க்க மடைவீர்கள் என நம்பி, உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று (03.06.2013) திங்கட்கிழமை இல.67/1, சிவநகர், உருத்திரபுரத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(35149) (45.6)

உருத்திரபுரம். குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

சின்னையா விநாயகமூர்த்தி



எமது பாடசாலை ஆசிரியையான செல்வி வி.வினித்தா அவர்களின் அன்புத் தந்தை சின்னையா விநாயகமூர்த்தி அவர்கள் 01.06.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/ தர்மக்கேணி அ.த.க. பாடசாலை.
(சி/9576) (45.6)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
09.09.1944

விண்ணில்
29.05.2008



திருமதி
வள்ளிப்பிள்ளை வேல்முருகு
திதி: அபரபக்க தசமி

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ ஐந்தாகின.
அம்மா உம் நினைவின் நிழலில் வாழும்

கட்டுக்கொம்பரை,
அல்வாய்-கிழக்கு, அல்வாய்.
021 226 3048

மச்சான், பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்.
(C/9575)(10.6)

மரண அறிவித்தல்

சின்னையா விநாயகமூர்த்தி
(பருத்தித்துறை சுகாதாரப் பணிமனை ஊழியர்)



கோவிற்கடவை, துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா விநாயகமூர்த்தி 01.06.2013 அன்று காலமானார்.
அன்னார் வசந்தியின் அன்புக் கணவரும், வினோதரன் (இத்தாலி), விஜிதா (இத்தாலி), வினித்தா (ஆசிரியை) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், அருட்குமாரனின் அன்பு மாமனாரும், ஆபினாசின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2013) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் கொட்டடி, இடைக்காடு, அச்சுவேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.
(C/9572)(6.11)

கொட்டடி,
இடைக்காடு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியை அழிப்பதற்கென நியமிக்கப்பட்டவரே எஸ்.பி.

## மாணவர்களிடம் காடைத்தனம் புரிகிறார் என ஜே.வி.பி. சாடல்

மாணவர்களைக் கைதிகளைப்போல் நடத்தும் காடைத்தனமான அமைச்சரிடமே உயர்கல்வியமைச்சுப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டும் ஜே.வி.பி., சட்டத்தின் ஆட்சியை ராஜபக்ஷ அரசு நடத்தவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பியின் மத்தியகுழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சாதாரணமான முறையில் நடத்தப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் போராட்டத்தின் மீது ராஜபக்ஷ அரசின் அரசியல் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கல்வியை அழிப்பதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள எஸ்.பி., பல்கலைக்கழகங்களை நாசம் செய்தல், மாணவர்கள், விரிவுரையாளர்களை அச்சுறுத்தல், கல்வியை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். கடந்த மூன்று வருட காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் 1,000இற்கும் மேற்பட்டோருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று பல்கலைக்கழக கல்விமுறை நாசமாக்கப்பட்டுள்ளது. இதற்கு சப்ரகமுவ பல்கலைக்கழகம் சிறந்த எடுத்துக்காட்டாகும். சப்ரகமுவ நிர்வாகத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. மழை, வெய்யிலுக்குக்கூட பல்கலைக்கழகம் மூடப்படும் நிலைமை காணப்படுகின்றது. இங்கு பயிலும் மாணவர்கள் பலத்த பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஐந்து பீடங்கள் உள்ளன. நுழைவுக் கட்டணமும் மும்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சில மோசடிகளும் இடம்பெறுகின்றன. குறைந்தளவு மாணவர்களை உள்வாங்கும் பத்து நாடுகளில் இலங்கை இருப்பதுடன் கல்விக்கு குறைந்தளவு நிதியை ஒதுக்கும் நாடாகவும் இருக்கின்றது.

உயர் கல்வியமைச்சை ராஜபக்ஷ அரசு காடைத்தனமான அமைச்சரொருவரிடமே ஒப்படைத்துள்ளது. மாணவர்களைக் கைதிகள் போன்றே அவர் பார்க்கின்றார். தனியார்மயப்படுத்தலே அவரது நோக்கமாகவுள்ளது - என்றார்.

# பாஷையூர் அந்தோனியாரின் கடல் திருவிழா இன்று

கொழும்புத்துறை, ஜூன் 3

பாஷையூர் புனித அந்தோனியார் திருவிழாவில் முன்னோடி வழிபாடாகிய கடல் அந்தோனியார் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கடல் நடுவே அமைந்துள்ள அந்தோனியார் கெபியில் இன்று மாலை 4.30 மணிக்கு வழிபாடுகள் இடம்பெறும். படகுகளில் செல்லும் பக்தர்கள் கடல் நடுவே படகில் இருந்தவாறே வழிபாடுகளில் பங்கேற்பர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய பாஷையூர் புனித அந்தோனியார் திருவிழாவின் நவநாள் வழிபாடுகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை திருவிழாவும் இடம்பெறும்.

முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கு பெருந்திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கும் இடம்பெறும். புனித அந்தோனியார் தேர்ப்பவனி அன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(ஒ-135-51)

## கண் பார்வையற்ற முதிய மாது கிணற்றில் தவறி விழுந்து சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

பிறப்பிலே இரண்டு கண்களிலும் பார்வையிழந்த வயோதிப மாது தவறுதலாக கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

மாதகல் கிழக்கில் நேற்றுக்காலை சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் வள்ளிப [illegible] என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-4-73)


கணினி திருத்தம் (Computer Repair) அழையுங்கள் 0779086737

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம்.


GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

(36826) (6.7)


# மரண அறிவித்தல்கள்

## அரியகுட்டி சிவராசா (செல்வராசா)

(கட்டட ஒப்பந்தகாரர்)



கந்தர்மடம் ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாக வும், திருநெல்வேலி வளாக ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சிவராசா (01.06.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் சின்னம்மா தம்பதிய ரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற புஷ்பராணி (வவா) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயசிறி (நோர்வே), ஜெகதீஷ் (லண்டன்), பிரசன்னா (உரிமையாளர் மெகா மாட், மொடேர்ன் ரெக்ஸ்), காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (நோர்வே), சுகித்தா (லண்டன்),இந்துசா, ஜீவாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், புலேந்திரன் (ஜேர்மனி), இலங்கேசன் (ஜேர்மனி), கருணாதேவி, புவீந்திரன் (ஜேர்மனி), உதயசாந்தி (பிரான்ஸ்), சுமதி (லண்டன்) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், ஜெனித் (நோர்வே),ரித்திக் (லண்டன்), சாஜன் (லண்டன்), ரிசான் (லண்டன்), ஆதேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக ஒழுங்கை,
(நல்லாயன் பேர் அருகில்)
திருநெல்வேலி.

தகவல்:
சி. பிரசன்னா (மகன்)

(37944)(45.6)

## பாலசுப்பிரமணியம் கமலநாதன்



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.16, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கமலநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்-தேவசேனா தம்பதியரின் மகனும், சந்தானலட்சுமி, சந்திரா, நகுலராஜன், சகுந்தலா, கமலேஸ்வரி, தேவராணி, துளசிதாசன்,தர்மசீலன், காலஞ்சென்ற பாலசுதன் ஆகியோரின் சகோதரனும், தங்கவேலு, தங்கராசா, சாரதா, மோகனதாஸ், விக்கினேஸ்வரன், குகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2013) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 16, சிவகுருநாதர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(37945)(6.7.11)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

## சூசைப்பிள்ளை திரேசம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரி சங்கம்
யா/சங்கானை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்.

(37946) (10.6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில்
04.01.1960



விண்ணில்
05.05.2013

கடந்த (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் குணநாதன் விமலாதேவி

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும், வைத்தியசாலையில் உதவி புரிந்தோருக்கும், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (04.06.2013) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

*அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.*

பொக்கணைச் சந்தி,
சந்நிதி வீதி, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(C 9577)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்லத்தம்பி தர்மலிங்கம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தர்மலிங்கம் நேற்று முன்தினம் (01.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.06.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. ஒரு மணிக்கு இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு. (99582)

தகவல்:
குடும்பத்தினர்.

# கொழும்பு -கண்டி கடுகதி சேவை

149 வருடங்களின் பின்னர் கொழும்புக்கும் கண்டிக்கும் இடையில் அதிசொகுசு கடுகதி ரயில் சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளது.10 ரயில் பெட்டிகளையும் 44 பயணி கள் இருக்கைகளை யும் கொண்ட இந்த ரயில் சேவை வாரத்தில் ஒரு நாள் சேவையில் ஈடுபடவுள்ளது.(14)

# தவறிவிட்டது

நவரத்தினராசா விஜயராசா ஆகிய எனது NIC (850 272131V), லைசன்ஸ் (B757030 ) ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் அளவெட்டிக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்புகளுக்கு:- 0771019105

# பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த தியாகராஜா கம்ஷன் ஆகிய நான் எதிர்வரும் 03.06.2013 தொடக்கம் எனது பெயரை தியா கராஜா கார்த்திகன் என மாற்றிக் கொள்கின்றேன் மேலும் இனி வரும் காலங்களில் எந்தவொரு ஆவணங்களிலும் இப் பெயரையே பயன் படுத்துவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(சி/9580) தி. கார்த்திகன்.

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் செந்திவேலாயுதம்

*(வெள்ளைக்கிளி- Keera லொறி உரிமையாளர்)*



துவாளி வீதி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்படமாகவும் கொண்ட அருணாசலம் செந்திவேலாயுதம் நேற்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும்,காலம் சென்ற தேவி மனோகரியின்(வவி) அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம், வேலாயுதம் மற்றும் தங்கராணி, கருணைவேல், அன்னராணி ஆகியோரின் சகோதரரும் துஷ்யந்தன் (ஜேர்மனி), பிருந்தன் (கொழும்பு), நிஷாந்தன் (ஜேர்மனி), கீர்த்திகா (ஜேர்மனி), ரமணன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சாந்தி, நிரஞ்ஜனி, கலைவாணி, குகன் ஆகியோரின் மாமனும், தீரன், அஞ்சனா, கரிஷ், தன்ஷயன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.06.2013) செவ்வாய்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
T.P- 0775440226, 0212263352 (சி/9584)(14.9.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சிவகாமிப்பிள்ளை நல்லலிங்கம்

செம்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமிப்பிள்ளை நல்லலிங்கம் நேற்று 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்- மாரிமுத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நல்லலிங்கத்தின் மனைவியும் கணேசலிங்கத்தின் சகோதரியும் காலஞ்சென்ற ஜெயராமலிங்கம் (ஓய்வுபெற்ற நகரசபை அதிகாரி, வவுனியா), கனகாம்பிகை, கனகமணி, செல்வராணி, மகேசலிங்கம் (மலேரியா தடுப்பு இயக்குநர்- முல்லைத்தீவு), ஜோதிமலர், ஜோதிலிங்கம் (ஆசிரியர், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2013) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்மலை, முல்லைத்தீவு.
0778378608. (37954)

தகவல்:
குடும்பத்தினர்.

# சின்னத்தம்பி கந்தையா

(முன்னாள் ஊழியர், காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்)



தியேட்டர்லேன் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா கடந்த (30.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வன்னியர்-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், அருள்மொழி, அருள்நிதி, அருள்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைநாயகம், தவேந் திரன், கேமன் ஆகியோரின் அன்பு மாமனும், டொறின் ஆனல்டா, ஜோய், பிரவீன், கவின், மினோல்டா, கெவின், கெய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (05.06.2013) புதன்கிழமை பி.ப. 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் திருச்சபை மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
021 720 0006

# V.R. வடிவேற்கரசன்

(பிரபல வர்த்தகரும் முன்னாள் ஸ்ரீலங்கா டயர் அசோசியேசன் தலைவரும், யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கிறீன்லேன்ஸ் ஹோட்டல் முன்னாள் தலைவர்/ நிர்வாகப்பணிப்பாளரும், ஸ்ரீ பிரதர்ஸ், வி.ஆர்.வி. டிரவல்ஸ், வி.ஆர். வடிவேற்கரசன் நிறுவனங்களின் தலைவர்)



வீரகத்திப்பிள்ளை இராஜசேகரம் வடிவேற்கரசன் கடந்த 01.06.2013 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜசேகரம் - அரசரத்தினம் அம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான நீதிராஜா (முன்னாள் செனட்டர்) - திலகவதி தம்பதியரின் மருமகனும் வீரகத்திப்பிள்ளையின் (கப்பலோட்டிய தமிழன்- தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய ஸ்தாபகர்) பேரனும் பத்மினிதேவியின் பாசமிகு கணவரும் திபாகரன், திபாகரி, தயாகரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஸ்தூரி, சபேசன், தினேஷ்குமார் ஆகியோரின் மாமனும் தாஷினி, தீனா, தரன், பிரித்திகா, கேஷினி, அட்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2013) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 05.06.2013 புதன்கிழமை காலை 08.30 மணியளவில் அவரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பின்ன ர் மு.ப. 11 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் இந்து முறைப்படி தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
இல்லம்: [illegible]
[illegible] 0112517916

அலுவலகம்:
இல: 271, செட்டியார் தெரு,
கொழும்பு 11. (சி/8695)

## செல்வி லீலா சிரோன்மணி யேசுசகாயம்

*(ஓய்வு பெற்ற ஆசிரியர் குண்டகசாலை M.V)*



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லீலா சிரோன்மணி யேசுசகாயம் நேற்று (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யேசுசகாயம் -ஆசையன்னம் ஆகியோரின் புதல்வியும், ஜெயமணி (ஓய்வு பெற்ற ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), காலஞ்சென்றவர்களான அல்பிரட் அருளானந்தம் (ஓய்வு பெற்ற வடமாகாண தபால் அத்தியட்சகர்), போலஸ் எட்வின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/பரியோவான் கல்லூரி) டேவிற் (முகாமையாளர் Jafferjee brothers) காலஞ்சென்ற ஹெலனா கிருபைமணி (ஓய்வு பெற்ற ஆசிரியர், நவாலி மகாவித்தியாலயம்) மற்றும் டெய்சி புஸ்ப்பமணி, Dr.சீவரட்ணம் (R.M.P. Shanthi clinic- வவுனியா) விக்ரோறியா நவமணி (ஓய்வு பெற்ற இசைத்தட்டு தொகுப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்), எலிசபெத் பத்மாமணி (ஓய்வு பெற்ற மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.06.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பு வாசா"
நவாலி தெற்கு, மானிப்பாய். (37949)(14.9.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச தரப்பு சாட்சியாக திரிவேதி

ஐ.பி.எல். தொடரில் இடம் பெற்ற ஆட்டநிர்ணயம் மற்றும் சூதாட்டம் தொடர்பான தகவல்கள் நாளுக்கு நாள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

ஆட்ட நிர்ணயம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இதுவரை ஸ்ரீசாந்த், சண்டிலா மற்றும் அங்கித் சவான் மற்றும் அமித் சிங் உட்பட ராஜஸ்தான் வீரர்கள், புக்கிகள் என்று மொத்தம் இதுவரை 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், ராஜஸ்தான் அணியின் மற்றொரு வீரர் சித்தார்த் திரிவேதியிடம் டெல்லி பொலிஸார் சூதாட்டம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

இவரையும் சூதாட்ட வலையில் முயற்சிகளில் சண்டிலா அணுகியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவரை அணுகிய சண்டிலா, விருந்துக்கு அழைத்துள்ளார். அதற்கு மறுப்பு தெரிவித்த திரிவேதி, புக்கிகள் கொடுத்த பணம் மற்றும் பரிசுப் பொருள்களையும் ஏற்க மறுத்துள்ளார்.

அதையடுத்து ராஜஸ்தான் அணியிலுள்ள பிராட் ஹொட்ஜ், கெவான் கூப்பர் ஆகியோரையும் விருந்துக்கு அழைத்துள்ளார் சண்டிலா. இவர்களும் மறுத்து விட்டனராம்.

இதனிடையே, சித்தார்த் திரிவேதி பொலிஸ் தரப்பு சாட்சியாக மாறியுள்ளதாக தெரிகிறது. இவர், நேற்றுமுன்தினம் டெல்லி சாகேத் நீதிமன்ற நீதிபதி முன்பு கொடுத்த வாக்குமூலம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில்,

''திரிவேதியை பலமுறை சூதாட்டத்துக்காக அணுகியுள்ளனர். 2012ஆம் ஆண்டு தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று தனது புலனாய்வு செய்திகளுக்காக இவரை தொடர்பு கொண்டுள்ளது. அதுகுறித்து பி.சி.சி.ஐ. ஊழல் தடுப்பு அதிகாரிகளிடம் அப்போதே அவர் முறையிட்டுள்ளார்.

தற்போது சண்டிலா மற்றும் நான்கு தரகர்கள் குறித்து அனைத்து உண்மைகளையும் கூறியுள்ளார்.

அரசு தரப்பு சாட்சியாக திரிவேதியை மாற்றும் முயற்சி நடக்கிறது'' என்று கூறுகின்றனர்.

இதனிடையே, பிராட் ஹொட்ஜ், கெவான் கூப்பர் ஆகியோரையும் அரசதரப்பு சாட்சியாக சேர்க்க பொலிஸார் முயற்சி எடுத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (ற)

## சக வீரர்கள் சிறையில் இருப்பது வேதனையானது –அப்ரிடி

ஐ.பி.எல். ஆட்ட நிர்ணய விவகாரத்தில் மூன்று இந்திய வீரர்கள் கைது செய்யப்பட்டமை வருத்தமளிப்பதாக உள்ளது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சயீட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

''பெரிய அளவில் பணம் கிடைக்கும் நிலையில், வீரர்கள் ஏன் இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. சக கிரிக்கெட் வீரர்கள் சிறையில் இருப்பதை கேட்பதற்கே வேதனையாக உள்ளது'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## கிரிக்கெட் வீரர்களுக்கும் 'செல்லப்' பெயர்கள்

ஆறாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், பல்வேறு வீரர்களை பட்டப்பெயர் வைத்து தரகர்கள் அழைத்து வந்தமை தற்போது தெரிய வந்துள்ளது.

அண்மையில் முடிந்த ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் வெடித்த சூதாட்ட சர்ச்சை, இது தொடர்பான கைதுகள் இன்னும் முடியவில்லை.

மும்பையில் கைது செய்யப்பட்ட நடிகர் விண்டூவிடம் இருந்து ஏராளமான தகவல்கள் வெளியாகி வருகின்றன. இவரிடம் தொடர்பு வைத்திருந்த சகோதரர்களான ஜெய்ப்பூர் தரகர்கள் பவான், சஞ்சய் ஆகியோரை தேடி வருகின்றனர்.

இதனிடையே விண்டூ, பவான், சஞ்சய் ஆகியோர் தங்களுக்கு இடையே சங்கேத வார்த்தைகளை பரிமாறிக்கொண்டது தெரிய வந்துள்ளது.


அதன்படி, விண்டூ தன்னை ஜாக் என்று அழைத்துக் கொள்வார். ஹவாலா பண மாற்றத்தின் போது இந்தப் பெயரை பயன்படுத்தினார்.

கிரிக்கெட் வீரர்களில் பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பவர் மேற்கிந்தியத்தீவுகளின் கெய்ல். இதனால், இவரை ராவணன் என்று அழைப்பராம்.

அணித்தலைவர் டோனிக்கு ஹெலிகொப்டர் என்றும் மலிங்காவுக்கு மக்கி என்றும் பெயர் வைத்துள்ளனர்.

இந்திய அணியின் இளம் வீரர் வீராட் கோஹ்லியை சைனிங், மூத்த வீரர் சச்சினை பட்கு எனவும் தரகர்கள் அழைத்துள்ளனர்.

இது தவிர, ஹர்பஜன் சிங்கிற்கு டோபி/பாக்டி, ஷேவாக்கிற்கு ஷாஸ்மா, ரெய்னாவுக்கு ஷேர், ஸ்ரீசாந்த்துக்கு ருடு, யுவராஜ் சிங்கிற்கு மொடல் என்றும் அஷ்வினுக்கு பிர்கி என்வும் வைத்துள்ளார்கள். இதுதவிர, மொடல் அழகிகளுக்கும் செல்லப் பெயர் உண்டாம். (ற)



பரீஸில் நடைபெறும் பிராஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில், ஏழாவது நாள் நடைபெற்ற மகளிருக்கான ஒன்றையர் ஆட்டத்தில் பெலாரசின் விக்டோரியா அஸரன்கா பிரான்ஸின் அலிஸ் கோர்னெற்றைச் சந்தித்தார்.

# செரீனா, பெடரர் அடுத்த சுற்றில்

பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மற்றும் சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3ஆம் சுற்று ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் 6:0, 6:2 என்ற நேர் செற்களில் ரோமானியாவின் சோரானா கிறிஸ்டியாவை வென்றார்.

ஆட்டத்தின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய செரீனா, முதல் செற்றை 23 நிமிடங்களில் கைப்பற்றினார்.

அடுத்த செற்றின் ஆரம்பத்தில் சற்று முன்னேறிய ரோமானியா வீராங்கனை 2 புள்ளிகளைப் பெற்றார். எனினும் பின்னர் செரீனாவின் அனுபவ ஆட்டத்தினை சமாளிக்க முடியாமல் தோல்வியடைந்தார்.

இதன்மூலம் 27 ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றி பெற்று செரீனா சாதனை படைத்துள்ளார்.

அடுத்த சுற்றில் ராபர்டா வின்சி அல்லது பெட்ரா செட்கோவ்ஸ்காவுடன் செரீனா விளையாடவுள்ளார்.

அதேவேளை, ஆடவர் ஒற்றையர் பிரிவு 3ஆம் சுற்று ஆட்டத்தில் 2ஆம் தரநிலை வீரர் ரோஜர் பெடரர், பிரான்ஸ் வீரர் ஜூலியன் பென்னட்டாவை 6:3, 6:4, 7:5 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

2009ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற பெடரர் காலிறுதியை உறுதி செய்யும் அடுத்த சுற்றில் அமெரிக்காவின் சாம் கெர்ரி அல்லது பிரான்ஸ் வீரர் சைமனை எதிர்கொள்ள வேண்டும்.(ற)



# பணிந்தார் சீனிவாசன்; பறிபோகுமா பதவி?

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ.) அவசர செயற்குழு கூட்டத்தின் முடிவில் சூதாட்டப் பிரச்சினைகளில் சிக்கியுள்ள சீனிவாசன், கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

ஆறாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரில் ஆட்ட நிர்ணயம் செய்த ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் ஆகியோர் பொலிஸாரிடம் சிக்கினர். அதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் சென்னை அணியின் 'கௌரவ' உறுப்பினர் குருநாத் மெய்யப்பன் கைதாகினர்.

இவர் பி.சி.சி.ஐ. தலைவர் சீனிவாசனின் மருமகன் என்பதால், சீனிவாசன் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று பல்வேறு மட்டத்தில் இருந்தும் வலியுறுத்தப்பட்டது.

**எதிர்ப்பு அதிகம்**

மொத்தமுள்ள 30 உறுப்பினர்களில் 24 பேர் ஆதரவு இருந்தால்தான், அவரை பதவியில் இருந்து நீக்க முடியும். தற்போதைய நிலையில் இவருக்கு 18 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆதரவாக 7 பேர் உள்ளனர். 6 பேர் நடுநிலையாக உள்ளனர். [illegible] தலைவரை பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மானம் கொண்டு வர குறைந்தது 10 பேர் தேவை. எதிர்ப்பு அதிகரித்த (18) நிலையில், சூதாட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விவாதிக்க வேண்டும். எனவே செயற்குழுவை கூட்ட வேண்டும் என்று இமாச்சல பிரதேச கிரிக்கெட் சங்கத் தலைவர் அனுராக் தாகூர் உட்படப் பலர் சீனிவாசனுக்கு நெருக்கடி கொடுத்தனர்.

நெருக்கடிகள் அதிகரித்துள்ள நிலையில் வேறுவழியின்றி பணிந்த சீனிவாசன் எதிர்வரும் 8ஆம் தேதி அவசர செயற்குழு கூட்ட அழைப்பு விடுத்தார். இந்த கூட்டத்தில் இவரது தலை தப்புவது கடினம் தான்.

**நிர்வாகிகள் பதவி விலகல்**

சீனிவாசனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், பி.சி.சி.ஐ., பொருளாளர் அஜய் ஷிர்கே, செயலர் சஞ்சய் ஜக்டலே ஆகியோர் பதவி விலகியுள்ளனர். தொடர்ந்து பல நிர்வாகிகளும் பதவி விலக முடிவு செய்திருப்பதால், சீனிவாசனுக்கு நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராத்தே போட்டிகள் நாளை ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூன் 3
வடமாகாணத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான கராத்தேப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை 15 வயது ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் பதினெட்டுப் பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

கடந்தாண்டு இடம்பெற்ற 15 வயதுப் பிரிவுப் போட்டிகளில் காட்டாவில் முதல் மூன்று இடங்களையும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் விரர்கள் பெற்றுக் கொண்டதுடன், குமித்தேயில் முதலாம், மூன்றாம் இடங்களை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களும், இரண்டாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரரும் பெற்றுக் கொண்டனர்.

அதேவேளை, 17 வயது ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காட்டா மற்றும் குமித்தேப் போட்டிகளில் இந்த முறை பதின்மூன்று பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

கடந்தாண்டு இடம்பெற்ற 17 வயதுப் பிரிவுக்கான போட்டிகளில் காட்டா, குமித்தேயில் முதலாம் இடத்தை ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி வீரரும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரரும், காட்டாவில் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரரும், குமித்தேயில் மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலய வீரரும் பெற்றனர்.

19 வயது ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காட்டா மற்றும் குமித்தேப் போட்டிகளில் இம்முறை பதின்னான்கு பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

கடந்தாண்டு இடம் பெற்ற 19 வயதுப் பிரிவுக்கான போட்டிகளில் காட்டா குமித்தேயில் முதலாம் இடத்தை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வீரரும், காட்டா வில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரரும், மூன்றாம் இடத்தை தென்மராட்சி மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய வீரரும் பெற்றுக் கெண்டார்கள்.

குமித்தேயில் இரண்டாம் இடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வீரரும், மூன்றாம் இடத்தை கிளிநொச்சி இந்துக் கல்லூரி வீரரும் பெற்றுக் கொண்டனர்.

காட்டா, குமித்தே ஆகிய குழுப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களையும் முறையே சென்.ஜோன்ஸ்கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி என்பன பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவிருக்கான இறுதியில் சம்பியனாக பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வீரர்களும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களும், மூன்றாம் இடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வீரர்களும் பெற்றுக் கொண்டனர்.

குறித்த கராத்தே போட்டிகள் ஆறாவது ஆண்டாக வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ற-86-400)



யாழ்ப்பாணம், ஜூன்
மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத் திய மாகாணம் ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்ப்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 'விளையட்டின் ஊடாக சமூக நல்லுறவை வளர்க்கும் நோக்குடான விளையாட்டு போட்டிகள்' யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இருநாள்கள் இடம்பெற்றன.

விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. அதில் ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி தலைவருக்கு வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜய லச்சுமி ரமேஸ் பரிசில் வழங்கினார். (ற-23)

## உதைபந்து பயிற்சி முகாம்







யாழ்ப்பாணம், ஜூன் 3
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரன்டட் சாட்ரட் வங்கியுடன் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணியினை தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, ஸ்ரன்டட் சாட்ரட் வங்கி உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வீரர்களுக்கான பயிற்சிகளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொழில்நுட்பப்பணிப்பாளர் பக்கிர் அலி தலைமையிலான குழுவி னர் வழங்கினர். (ற-23)

### அரியாலை சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் தொடர்

# இறுதியாட்டத்தில் மோதும் கலைமதி, இந்து இளைஞர்




யாழ்ப்பாணம், ஜூன் 3
அரியாலை சனசமூக நிலையத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சனசமூக நிலையம் நடந்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி என்பன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற் றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 25:21, 25:22, 30:28 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்தற்கு தகுதி பெற்றது.

இரண்டவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 25:19, 25:21, 25:23 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் சதுரங்கச் சுற்றுப் போட்டியில் 15, 19 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றன. 128 பாடசாலை அணிகளைச் சேர்ந்த 850 இக்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் இதில் பங்குபற்றுகின்றனர். இறுதிப்போட்டி இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. (ற-86)

## தாச்சித் தொடரில் புதிய பாரதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 3
பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழகம் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான தாச்சி சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதிய ஒளி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது.

அதில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி 7:2 என்ற புள்ளிகள்அடிப்படையில்வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.(ற-23)

## கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
அரியாலை சனசமூக நிலையத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, வடமாகாண ரீதியாக 7 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 8 பேர் பங்கு பற்றும் கிரிக்கெட் சுற்றுத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது.

தொடரில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் போட்டி ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-23)

## கரப்பந்து இறுதியாட்டம்



யாழப்பாணம், ஜூன் 3
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே கரபந்தாட்டச் சுற்றுத் தொடரை நடத்தி வருகின்றது. அதில் பெண்கள் பிரிவுக்கான இறுதியாட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நாயன் மானர்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கே.கே. எஸ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதேவேளை, 'பி' பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் மீது ஆஸியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3
ஆஸ்திரேலியாவில் இலங்கை அகதிகளின் வீட்டுக்குள் உட்புகுந்த கறுப்பினக் காடையர்கள் நடத்திய கண்மூடித் தனமான தாக்குதலில் நால்வர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். இந்தத் தாக்குதல் காரணமாக குறித்த பகுதியிலுள்ள இலங்கை அகதிகள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-
குறித்த தினத்தன்று, உறக்கத்தில் இருந்த இலங்கை அகதிகளின் வீடுகளுக்குள் 20க்கும் மேற்பட்ட கறுப்பினக் காடையர்கள் திடீரென உட்புகுந்தனர். வீடுகளுக்குள் இருந்தவர்களை இரும்பு, கத்தி, பொல்லுகள் போன்ற ஆயுதங்களால் காடையர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இதன்போது அங்கிருந்த ஈழ அகதிகள் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களைத் தாக்கிய காடைக் கும்பல், அங்கிருந்த கைத்தொலைபேசிகள், மடிக்கணினிகள், பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போதும் தாக்குதலாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்தத் தாக்குதலை அடுத்து மெல்பேர்னில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்ந்தும் இது போன்ற அசம்பாவிதங்கள் நிகழக்கூடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-14)

# புலிகளின் 120 கோடி சொத்து அரசு வசம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறுவனம் ஒன்றின் பெயரில் வாங்கப்பட்ட 3 மாடிக் குடியிருப்பு, கொட்டாஞ்சேனையில் உள்ள அச்சகம், கட்டுநாயக்கவில் உள்ள காணி என்பனவும் உள்ளடங்குகின்றன. கட்டுநாயக்க விமானத் தளம் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தவே அதற்கு அருகில் புலிகள் காணியைக் கொள்வனவு செய்திருக்க வேண்டும் என்றும் குற்றப் புலனாய்வு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலும் பல உரிமை கோரப்படாத அல்லது உரிமையாளர்களை அறிய முடியாதுள்ள நிலையான வங்கி வைப்புக் கணக்குகள் புலிகளுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ங-சி)


SUCCESS INSTITUTE
K.K.S ROAD, KONDAVIL
(உப்புமடப் பிள்ளையார் கோவில் அருகில்)
A/L 2014 / 2015 கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புக்கள்
யாழ்-கொழும்பு பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் புதியதோர் உதயம்
ஆரம்பம்:05.06.2013 புதன் மாலை 4 மணி
அனைவரும் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் பக்கமாக...
திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை





Printing House
enjoy the quality, admire the value
உங்கள் எண்ணங்களுக்கேற்ற வடிவங்களில் அழைப்பிதழ்களை செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.
Wedding Cards Showroom
பிறிண்டிங் ஹவுஸ்
021 221 9929, 077 2200148
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# மாணவர் அடக்குமுறை நீடித்தால் தொடர் போராட்டங்கள் வெடிக்கும்

## சோஷலிஸ மாணவர் சங்கம் எச்சரிக்கை

''மாணவர் அடக்குமுறை, கல்வியை தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றை அரசு உடன் நிறுத்தாவிட்டால், அனைத்துத் தரப்பினரையும் ஒன்றுதிரட்டி தொடர் போராட்டங்களை நடத்துவோம்.''
- இவ்வாறு சோஷலிஸ மாணவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட சோஷலிஸ மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நலிந்த ஜயதிஸ்ஸ கூறியதாவது:-

பல்கலைக்கழகக் கல்வி தனியார் மயமாவதற்கான பாதை ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் ஆரம்பித்துவைக்கப்பட்டது. 78-88களில் ஜே.ஆர்.ஜெயவர்தன இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இன்று தனியார் வைத்தியக் கல்லூரியும் திறக்கப்பட்டுள்ளது. இரண்டு மாணவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாணவர்களின் ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன், பல்கலைக் கழக மாணவர்கள் சிறையும் வைக்கப்பட்டனர்.

6 மாணவர் அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன; ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திலும் அரசு அடக்குமுறை தொடர்கிறது. பல மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்றும், அவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களையும் மன்னிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மாணவர் மீதான அடக்குமுறை தொடர்ந்தால் இலவசக் கல்விக்கு ஆதரவான அனைவரையும் ஒன்று திரட்டிப் போராடுவோம்'' - என்றார்.

# ஒரே இரவில் நான்கு இந்துக் கோயில்கள் மட்டக்களப்பில் விஷமிகளால் உடைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகரில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிள்ளையாரடி வளைவில் புத்தர் சிலையை நிறுவ நீதிமன்றத்தால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் இடம்பெற்ற இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்கள் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களை தோற்றிவித்துள்ளன.

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீ செல்லக் கதிர்காமர் ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், கிரான் குளம் ஐயனார் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயம் ஆகியவற்றிலேயே இனந்தெரியாதோர் இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை அரங்கேற்றி உள்ளனர்.

இந்து ஆலயங்களை உடைக்க வேண்டும் என்ற நோக்கமும், அங்கிருந்த பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிடவேண்டும் என்ற நோக்கமும் இந்தச் சம்பவங்களின் பின்னணியில் தென்படுவதாக ஆலயங்களின் நிர்வாகத்தினரும், பிரதேச மக்களும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீ செல்லக் கதிர்காமர் ஆலயத்தில் இருந்த 19 விக்கிரகங்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த சுமார் 20 பவுண் தங்க நகைகளும், விக்கிரகத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த தங்கத் தகடும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாங்காடு கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் மூல விக்கிரகம் மற்றும் நவக்கிரகங்கள் என்பன உடைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கிரான்குளம் கிராமத்திற்கும், அம்பிலாந்துறைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள ஐயனார் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் மற்றும் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த மூன்று ஆலயங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆலயங்களின் நிர்வாகத்தினர் களுவாஞ்சிக்குடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த கும்பாபிஷேக கலசம் சேதமாக்கப்பட்டுள்ளதோடு அந்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து கேள்வியுற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் குறித்த ஆலயங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். (ங-சி-ரி)


## புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிலையத்துக்கு பணியாளர்கள் தேவை

A9 வீதி, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நவீன முறையில் அமைக்கப்பட்ட எரிபொருள் நிலையத்துக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை'

- எரிபொருள் நிரப்பியாளர்கள் (இருபாலாரும்)
- கணக்கு பதிவாளர் (கணினி அறிவுடையவர்)

குறிப்பு: கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்துக்கும் மேற்படி பணியாளர்கள் தேவை.

பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் யாழ். நகரில் மணிக்கூட்டு கோபுர வீதியில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு தகுந்த ஆவணங்களுடன் எதிர்வரும் (08.06.2013) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நேரில் வரவும்.

(சி/95/9)(14.9.7) உரிமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.